மலர்-3 இதழ்-54 நவம்பர் 16-30 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
மெயில் புக்
உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




## குபேரனுடன் கிரிவலம் வாருங்கள்

# வாபரனை வாவராக மாற்றிய பொய் கதை

# துன்பங்கள் போக்கும் தீபம்



- கஷ்டங்கள் நீங்க, நினைத்தது நடக்க எளிய வழி தீபம் ஏற்றுவதுதான். தீப ஒளி இருக்குமிடத்தில் தெய்வ அணுக்கிரகம் நிறைந்திருக்கும். வீட்டில் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் தீபம் ஏற்றி வைக்கலாம்.
- தீபத்தில் உள்ள எண்ணெய் தான் எரிய வேண்டுமே தவிர திரி அல்ல. திரி எரிந்து கருகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- விளக்கை ஏற்றும்போது வீட்டில் பின் வாசல் இருந்தால் அதன் கதவை சாத்தி விட வேண்டும்.

# இறை வழிபாடு

- சுப்ரபாதத்தை தினமும் காலை வேளையில் மட்டுமே கேட்க வேண்டும். அவ்வாறு கேட்க முடியாத நிலையில் மாலையில் கேட்க கூடாது.
- காலையில் விழித்தவுடன் நாராயணனையும் இரவு தூங்கு முன் சிவபெருமானையும் நினைக்க வேண்டும்.



# பாவம் தீர

- காலையில் நின்று கொண்டு செய்யும் ஜெபத்தால் இரவில் செய்த பாவமும், மாலையில் உட்கார்ந்து கொண்டு செய்யும் ஜெபத்தால் பகலில் செய்த பாவமும் தொலைகிறது.
- விளக்கு எரிந்துகொண்டிருக்கும்போது கைவிரலால் எண்ணெய்யிலுள்ள தூசியை எடுப்பதோ திரியை தூண்டுதோ கூடாது.
- எரிந்து கொண்டிருக்கும் தீபத்தை ஆண்கள் அணைக்கக் கூடாது.



# மாங்கல்ய விருத்திக்கு



- ருத்ரம், சமகம் போன்றவற்றை வீட்டில் காலையில் தினமும் கேட்பது நல்லது.
- நாம் வீட்டில் கடவுளை வணங்கும்போது நின்றவாறே தொழுதல் குற்றமாகும். அமர்ந்தபடி தான் தொழுதல் வேண்டும்.
- யாராவது தூங்கிக் கொண்டிருக்கும்போது காலை, மாலை வேளைகளில் விளக்கேற்றக்கூடாது. தூங்குபவர்கள் எழுந்த பிறகுதான் விளக்கேற்ற வேண்டும். தூங்குபவர்களின் தலைக்கு நேராக தேங்காய் உடைக்கக் கூடாது.
- பூஜையின்போது விபூதியை நீரில் குழைத்து பூசக் கூடாது. தீட்சை பெற்றவர்கள் மட்டுமே விபூதியை நீரில் குழைத்து பூசலாம்.
- பூஜை அறையில் வழிபாடு முடிந்ததும் இடது நாசியில் சுவாசம் இருக்கும்போது பெண்கள் குங்குமம் இட்டுக் கொண்டால் மாங்கல்ய விருத்தி ஏற்படும்.



# திருமுறை செய்த அற்புதங்களும் அதிசயமும்



- வேதங்களால் பூட்டப்பட்ட திருக்கதவு திறந்தது பிறகு திருத்தாளிட்டது
- பாலை நிலம் நெய்தல் ஆனது
- பாண்டியன் சுரம் தீர்த்து கூன் நிமிர்த்தியது
- தேவார ஏடுகளை தீயில் கருகாமல் பச்சையாக எடுத்தது எதிர் நீச்சல் இடவைத்தது
- ஆண் பனை பெண் பனையாகியது
- விஷத்தினால் இறந்த செட்டி உயிர்பெற்றது
- எலும்பை பெண்ணாக்கியது
- சுண்ணாம்புக் காளவாயில் 7 நாட்கள் இருந்தும் உயிர் பிழைத்தது
- மத யானையை வலம் வரச்செய்து வணங்கவைத்தது
- மானசரோவரில் மூழ்கி திருவையாற்றில் எழுந்தது
- கல்லை தெப்பமாக கொண்டு கரையேறியது
- செங்கல்லைப் பொன்னாக்கியது
- விருதாசலத்தில் மணிமுத்தாற்றில் இட்ட பொன்னை ஆரூர் குளத்தில் எடுத்தது
- முதலை விழுங்கிய பிள்ளையை மீட்டது
- காவேரி பிரிந்து வழி விட்டது
- நரியை குதிரையாக்கியது
- வெள்ளானையில் கயிலாயம் சென்றது
- குதிரையை நரியாக்கியது
- பிறவி ஊமையை பேச வைத்தது
- பரம்பொருளான சிவபெருமானே எழுதிய பெருமைக்குரியது.

இப்படி திருமுறைகளின் அற்புதங்கள் ஏராளம் அதன் பெருமைகளை அளவிட முடியாது திருமுறைகளை நாளும் ஓதுவோம் சிவானுபவம் பெறுவோம்

# ஈர துணியுடன் பூஜை கூடாது..

- பூஜை அறையில் தெய்வப்படங்களை வடக்குப் பார்த்து வைத்தால் சாபமுண்டாகும்.
- விரத தினத்தில் தாம்பூலம் தரித்தல், பகல் உறக்கம், தாம்பத்திய உறவு, சண்டையிடுதல் கூடாது.
- ஈர உடையுடனும், ஒராடையுடனும், தலைகுடுமியை முடியாமலும், தலையிலும், தோளிலும் துணியை போட்டுக் கொண்டோ, கட்டிக் கொண்டோ வழிபாடு செய்யக் கூடாது.
- ஈர ஆடையுடன் வழிபட நேருமானால் ஈர உடையை, ஓம் அஸ்த்ராய பட் என்ற 7 முறை கூறி உதறி உடுத்தலாம்.
- ஆண்கள் தெய்வங்களை வழிபடும்போது தையல் உள்ள உடைகளை அணியக் கூடாது.



# கும்பாபிஷேகம்

**சைவர்கள் மகா கும்பாபிஷேகம் என்றும் வைணவர்கள் மகா சம்ப்ரோக்ஷணம் என்றும் கூறுவர்**



குடமுழுக்கு அல்லது கும்பாபிஷேகம் என்பது ஒவ்வொரு கோவிலிலும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டிய ஒரு சடங்காகும். இந்தச் சடங்கின் மூலம் கோவிலுக்குள்ளிருக்கும் கடவுள் சிலைகளுக்கு தெய்வீகத்தன்மை புதுப்பிக்கப்படுகிறது.

குடத்தில் நீர்நிரப்பி புனித ஆறுகளின் நீராக உருவகித்து மந்திரங்களினால் தெய்வத்தன்மை ஏற்றப்பட்ட நீரினால் சிலைகளும் கோபுரத்தின் உச்சியிலிருக்கும் கலசங்களும் நீராட்டப்படுவதால் இது குடமுழுக்கு என்று அழைக்கப்படுகிறது.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார் கள், அந்த வகையில் கோபுர கலசங்களும் தெய் வத்தன்மை பெறுவதால் ஒருவர் கோவிலுக்குள் செல்லாமலே கோபுர தரிசனம் மூலமே கடவுளின் அருளைப் பெற இயலும் என்பது இறையாளர்களின் நம்பிக்கை.

கோபுரத்திற்கு மட்டுமே இவ்வளவு சக்தி என் றால் உள்ளே சென்று இறைவனை தரிசித்தால் எவ் வளவு பலன் கிடைக்கும். அந்த பலன் கிடைக்க இறை சக்திக்கும், கோவில் கோபுரத்திற்கும் நடைபெறும் அற்புத நிகழ்வுதான் கும்பாபிஷேகம் எனப்படும்.

இந்த கும்பாபிஷேகத்தில் ஒருசில வகைகள் உள்ளன. அந்த வகைகளைப் பற்றி பார்ப்போம்.

## ஆவர்த்தம்

ஓரிடத்தில் புதிதாக ஆலயம் அமைத்துப் பிரதிஷ்டை செய்யப்படும் மூர்த்திகளுக்குக் கும்பாபிஷேகம் செய்யப் படுவது.

## அனாவர்த்தம்

பூஜை இல்லாமலும் ஆறு,கடல் இவற்றால் சிதிலமடைந்திருந்தாலும் அக்கோயிலைப் புதிதாக நிர்மாணம் செய்து கும்பாபிஷேகம் செய்வது.

## புனராவர்த்தம்

கருவறை,பிரகாரம்,கோபுரம் முதலியன பழுது பட்டிருந்தால் பாலாலயம் செய்து அவற்றை புதுப்பித்து அஷ்ட பந்தனம் சார்த்தி பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வது.

## அந்தரிதம்

கோயிலுள் ஏதேனும் தகாதன நேர்ந்து விடின் அதன் பொருட்டு செய்யப்படும் சந்தி.

இவ்வாறு செய்யப்படும் கும்பாபிஷேகத்தின் போது பல்வேறு சடங்குகளைக் கடைபிடிக்கின்றனர். ஒவ்வொரு சடங்கிற்கும் ஒவ்பொரு பலன் உண்டு அவ்வாறு செய்யப்படும் ஒருசில சடங்குகளைப் பார்ப்போம்.

### ஆவாஹனம்

ஆவாஹனம் என்றால் கும்பத்தில் உள்ள நீருக்குள் மூர்த்திகளை எழுந்தருள செய்தல் என்பது பொருள். கும்பத்தை முதலில் கோயிலில் உள்ள தெய்வத்திருவின் அருகில் வைத்து தர்ப்பை, மாவிலை ஆகியவற்றைக் கொண்டு மந்திரங்கள் ஓதி, பிம்பத்தில் விளங்கும் மூர்த்தியை கும்பத்தில் எழுந்தருளச் செய்வார்கள். பிறகு அந்த கும்பத்தை யாகசாலைக்கு எழுந்தருளச் செய்வார்கள். தர்ப்பையின் மூலம் கும்பத்தில் உள்ள தெய்வீக சக்தியை பிம்பத்திற்கு மீண்டும் செலுத்துவார்கள்.

### கும்பம்

யாகசாலையில் மந்திரம், கிரியை, தியானம் ஆகியவற்றுடன் வளர்க்கப்பட்டு எழும் புகையுடன் வேத ஒலி, சிவாகம ஒலி, மறை ஒலி ஆகியவற்றுடன் பக்தர்களின் நல்ல எண்ணங்களும், எங்கும் நிறைந்திருக்கின்ற திருவருள் சக்தியை தூண்டிவிட்டு கும்பத்தில் விளங்கச் செய்யும். அப்போது கும்பம் தெய்வீக சக்தி பெறும். இந்த கும்பத்தை சிவனின் வடிவமாக ஆகமங்கள் கூறுகின்றன.

### பாலாலயம்

கும்பத்தை கோயிலில் உள்ள தெய்வச்சிலை அருகில் வைப்பார்கள். தர்ப்பை, மாவிலை கொண்டு மந்திரங்கள் ஓதி, தெய்வ வடிவில் விளங்கும் மூர்த்தியை கும்பத்திற்கு மாற்றுவார்கள். பின்பு அதை வேறிடத்திற்கு எழுந்தருளச் செய்வார்கள். இதை பாலாலய பிரவேசம் என்பர்.

### கிரியைகள்

கும்பாபிஷேகம் நடக்கும்போது ஒரு காலத்தில் 64 கிரியைகள் செய்யப்பட்டன. காலப்போக்கில் 55 கிரியைகள் செய்யப்பட்டன. ஆனால் தற்போது எல்லா கிரியைகளும் செய்யப்படுவதில்லை. 64ல் முக்கியமான 13 கிரியைகளை மட்டும் தேர்ந்தெடுத்து கும்பாபிஷேகத்தை நடத்துகின்றனர்.



## பலன்

பன்னிரண்டு ஆண்டுகள் ஆலயத்திற்குச் சென்று இறைவனை மன, மெய்களினாலே வழிபட்டவருக்கு என்ன என்ன அருள் வருமோ, அத்தனை அருளும் கும்பாபிஷேகத்தை பார்த்த ஒரு விநாடியில் வரும். புதையல் எடுத்துத் தனவந்தன் ஆவது போல், கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டவருக்குத் திருவருள் கைகூடி வரும்.

• • •

தற்போது பல கோவில்களில் பணம் கொடுத்தவர்களுக்கு இறைவனை தரிசிக்க முன்னுரிமை வழங்குகின்றனர். இது மிகவும் பாவத்திற்குரிய செயலாகும். வசதி வாய்ப்பு இல்லாத உண்மை பக்தர்கள் இறைவனை காண முடியாமல் மனம் வருந்துவார்கள். இதுபோன்ற கொடிய சம்பவம் கலியுகத்தில் நடைபெறும் என்பதை முன்கூட்டியே அறிந்த நம் முன்னோர்கள், ஏழை மக்களின் குறையை போக்கவே கும்பாபிஷேகம் நடந்து முடிந்த பிறகு 45 நாட்களுக்கு மண்டல பூஜைகள் தினமும் நடத்தும் வழக்கத்தை கொண்டுவந்தனர். இந்த 45 நாட்களில் ஏதாவது ஒரு நாளில் கோவிலுக்கு சென்று மனம் உருகி வழிபட்டால் கும்பாபிஷேகத்தை கண்டுகளித்த பலன் கிடைக்கும்.

### ஆசாரியவர்ணம்

கும்பாபிஷேகத்திற்கென கிடைக்கும் பொருளுக்கு பூஜை செய்ய வேண்டும். இதை தன பூஜை என்பர். பூஜை செய்த பணம் அல்லது பொருளில் ஒரு பகுதியை கட்டட வேலைக்கும், ஒரு பகுதியை நித்திய, மாதாந்திர, விசேஷ நட்சத்திர பூஜை உற்சவத்திற்கும், மூன்றாவது பாகத்தை ஆபரணங்கள் வாங்கவும் ஒதுக்குவார்கள். இப்படியே கோயில் காரியங்கள் சம்பந்தப்பட்ட 11 பாகமாக இந்த செல்வத்தை பிரிப்பார்கள். கும்பாபிஷேகத்தை நடத்தும் பிரதான ஆசாரியரை வணங்கி, இந்த செல்வத்தைக் கொண்டு குடமுழுக்கு நடத்தி தாருங்கள் என கேட்டுக்கொள்ள வேண்டும். இதையே ஆசாரியவர்ணம் என்பர்.

### அனுக்ஞை

கோயில் பழுது பார்க்கப்பட்டு திருப்பணிகள் நிறைவு பெற்ற பிறகு, ஒரு நல்ல நாளில் கும்பாபிஷேக நிகழ்ச்சியை முன்னின்று நடத்தி வைப்பதற்கு தகுதியான ஒருவரை தேர்ந்தெடுப்பதையே அனுக்ஞை என்கிறார்கள். விநாயகர் சன்னதி முன்பு இந்த நிகழ்ச்சி நடக்கும். சம்பந்தப்பட்டவரே கும்பாபிஷேகத்தை நடத்தித் தர அனுமதி தரவேண்டும் என விநாயகரிடம் வேண்டி கேட்டுக் கொள்வதே அனுக்ஞை ஆகும்.

### பிரவேசபலி

கும்பாபிஷேகம் செய்யும் இடத்திலிருந்து எட்டு திசைகளிலும் வசிக்கின்ற ராட்சதர் முதலான தேவதைகளுக்கு உணவு கொடுத்து எழுப்பி, அவர்களை கடல், மலை, காடு, ஆறு, மயானம் ஆகிய இடங்களில் சென்று இருங்கள் என திருப்திப்படுத்தி வழி அனுப்புவதே பிரவேச பலி ஆகும். கும்பாபிஷேகங்களில் மட்டுமின்றி, கோயில்களில் திருவிழா நடக்கும்போதுகூட இதை செய்ய வேண்டுமென்று ஆகமங்கள் கூறுகின்றன.

### வாஸ்துசாந்தி

ஆகமங்களிலும், சிவமகா புராணத்திலும் வாஸ்து பற்றி கூறப்பட்டுள்ளது. அந்தகாசுரன் என்பவனை கொல்வதற்காக தேவர்கள் சிவபெருமானிடம் கோரிக்கை வைத்தனர். சிவபெருமான் தனது வியர்வைத் துளியிலிருந்து ஒரு பூதத்தை உருவாக்கி அந்தகாசுரனை வதைத்தார். அந்த பூதம் சிவனிடம் பல வரங்கள் பெற்று உலகத்தை வருத்தியது. சிவபெருமான் பூதத்தை அடக்க அதிபவன் என்பவரை சிருஷ்டித்து அனுப்பினார். அதிபவன் அந்த பூதத்தின் உடலின்மீது 53 தேவதைகளை வசிக்க செய்து, மாயக்கயிறுகளால் கட்டினார். இதனால் இவர் வாஸ்துபுருஷன் என பெயர் பெற்றார். வாஸ்து புருஷனால் குடமுழுக்கு கிரியைக்கு இடையூறு நேராதபடி 53 தேவதைகளுக்கும் பூஜை, பலி, ஹோமம் ஆகியவற்றால் சாந்தி செய்ய வேண்டும். இதுவே வாஸ்து சாந்தி ஆகும்.

### ரக்ஷா பந்தன்

காப்பு கட்டுதல் என இதற்கு பொருள். சிவாச்சாரியார்கள் நாகராஜனுக்கு பூஜை செய்து, மந்திரித்த மஞ்சள்கயிறை வலது மணிக்கட்டில் கட்டிக்கொள்வார்கள். கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ளும் சிவாச்சாரியார்களின் குடும்பத்தில் எதிர்பாராதவகையில் ஏதாவது தீட்டு ஏற்பட்டால் காப்பு அவிழ்க்கப்படும்வரை அந்த தீட்டு அவர்களை பாதிக்காது.

### கடஸ்தாபனம்

கும்பாபிஷேகத்தில் மிக முக்கியமானது கடஸ்தாபனம். கலசம் நிறுவுதல் என்பது இதன் பொருள். தங்கம், வெள்ளி, தாமிரம், மண் ஆகிய ஏதாவது ஒன்றில் கும்பங்கள் செய்யப்படும். கும்பங்களை இப்படித்தான் அமைக்க வேண்டும் என்ற வரையறைகள் உள்ளன. இவ்வாறு அமைக்கப்பட்ட கும்பங்களை குறைகள் இல்லாமல் மந்திரித்து, அக்னியில் காட்டுவார்கள். சிவப்பு மண்ணை கும்பத்தின் மீது பூசி, நூல் சுற்றி ஆற்றுநீர் அல்லது ஊற்று நீரால் நிரப்புவார்கள். கும்பத்தின் மேல் வாய் பகுதியில் மாவிலைகளை செருகி, தேங்காய் வைப்பார்கள். கும்பத்திற்குள் நவரத்தினம், தங்கம், வெள்ளி, நவதானியம் ஆகியவற்றை பரப்புவார்கள். எந்த மூர்த்திக்கு குடமுழுக்கு நடக்கிறதோ அந்த மூர்த்தியின் உடலாக அந்த கும்பம் கருதப்படும்.

### அஷ்டபந்தனம்

கும்பாபிஷேகத்தை அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் என சொல்வதுண்டு. பீடத்தின்மீது வைக்கப்படும் தெய்வ திருவுருவங்கள் அசையாமல் உறுதியுடன் நிலைத்து நிற்க, கொம்பரக்கு, சுக்கான்தான், குங்குலியம், கற்காவி, செம்பஞ்சு, ஜாதிலிங்கம், தேன்மெழுகு, எருமையின் வெண்ணெய் ஆகிய எட்டுவகை மருந்துகளை கலந்து சார்த்துவார்கள். அஷ்டம் என்றால் எட்டு என பொருள். இந்த எட்டுவகை மருந்துகளை சார்த்துவதற்கே அஷ்ட பந்தனம் என பெயர்.

### மிருத்சம்கிரஹணம்

இதற்கு மண் எடுத்தல் என பொருள். கும்பாபிஷேகத்தின்போது அங்குரார்ப்பணம் எனப்படும் முளையிடுதல் நிகழ்ச்சி நடக்கும். மண்ணைத்தோண்டி பாலிகைகளில் இட்டு, நவதானியங்களை தெளித்து, முளைப்பாலிகை அமைப்பார்கள். இதுவே மிருத்சம் கிரஹணம் எனப்படும்.

### குண்டங்கள்

கும்பாபிஷேகத்தில் மிகவும்முக்கிய சடங்காக அறியப்படுவது குண்டம் அமைத்தல் ஆகும். இதில்

ஏக குண்டம் – ஒரு குண்டம் அமைத்தல்.

பஞ்சாக்னி – ஐந்து குண்டம் அமைத்தல்.

நவாக்னி – ஒன்பது குண்டம் அமைத்தல்.

உத்தம பக்ஷம் – 33 குண்டம் அமைத்தல்.

மேற்கண்டவாறு ஒவ்வொரு கோவிலின் வசதி வாய்ப்பிற்கு ஏற்ப குண்டங்கள் அமைக்கப் படுகின்றது.

கும்பாபிஷேகத்திற்கு செய்யப்படும் யாகங்களை 2–காலம், 4–காலம், 8–காலம், 12–காலம் என்று நம் முன்னோர்கள் பிரித்து வைத்துள்ளனர். ஒவ்வொரு திருக்கோயிலின் வசதிவாய்ப்பிற்கு ஏற்ப காலங்கள் மாறுபடும். ஆனால் மேற்கண்ட காலங்களில் மட்டுமே யாகங்கள் நடைபெறும்.

யோகஜம் என்ற சிவாகமம் சரீரமாக கும்பத்தை எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பதற்கு விபரமாகச் சொல்லுவதாவது. கும்பமாகிய குடம் மாமிசமாகும், குடத்திலுள்ள தண்ணீர் இரத்தமாகும், கும்பத்தினுள் போடப்படும் ரத்தின்ங்கள் சுக்ளமாகும், கும்பத்தின் உள்ளே தர்பையினால் செய்யப்பட்ட கூர்ச்சம் நாடியாகும், குடத்தின் மேலே நெருக்கமாகச் சுற்றப் பட்டுள்ள முப்புரி நூல்களே நரம்புகளாகும், கும்பத்தை சுற்றி போர்த்திக் கட்டியுள்ள வஸ்த்திரமே தோல் ஆகும், குடத்தின் மேல் இருக்கும் தேங்காய் சிரசாகவும், முகமாகவும் கூறப்படுகிறது, தேங்காயின் மேலே விரித்துள்ள தர்பையினால் செய்யப்பட்ட லம்ப கூர்ச்சம் சிகை {குடுமி} ஆகவும், தேங்காய்க்கு அடியில் போடப்படும் மாவிலைகள் ஸ்வாமியின் ஜடாபாரங்கள்,உச்சரிக்கப்படும் மந்திரங்களே பிராணனாகும் என்று அங்க கற்பனை சிவாகமத்தில் கூறப்படுகின்றது.

தொகுப்பு: ஷ்யாம்,


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com



# வாபரனை வாவராக மாற்றிய பொய் கதை

இந்துக்கள் புராணங்கள், வேத மந்திரங்கள், வரலாறு போன்றவற்றில் பல்வேறு இடைச் செருகல்கள் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு விதமாக புகுந்துள்ளது. அந்த வகை யில் சபரிமலை ஐயப்பன் புராணக் கதை யில் வாவர் என்பவர் இடைச் செருகளாக சேர்க்கப் பட்டதாக பல்வேறு ஆய்வாளர்கள் கருத்து தெரி வித்துள்ளனர்.

அதைப்பற்றி விரிவாக பார்ப்போம்...

சபரிமலை செல்பவர்கள் முதலில் பேட்டை சாஸ்தாவை வணங்கிவிட்டுத்தான், ஐயப்பனை தரிசிக்கவேண்டும் என்று ஐயப்பன் புராணம் கூறுகிறது.

பேட்டை சாஸ்தா என்பவர் வாபர சுவாமி என்ற பூத கணங்களின் தலைவர் ஆவார்,

சுவாமி ஐயப்பன் ராணியின் சூழ்ச்சியால் புலிப்பால் கொண்டு வருவதற்கு புறப்பட்டார்.

வனத்தின் எல்லையாகிய எருமேலியில் சிவ பெருமான் அனுப்பிய பூதகணங்கள் வாபரன் என்ற பூதகணத்தலைவனின் தலைமையில் ஸ்ரீ ஐயப்பனை சந்தித்து வணங்கி நின்றனர்.

ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு மகிஷி சம்ஹாரம் செய்ய அவை உதவியாக நின்றன.

பின் ஐயப்பன் புலிக்கூட்டங்களுடன் பந்தளம் திரும்பினார்.

பூதகணங்கள் வனத்தின் எல்லைவரை உடன் வந்து வழியனுப்பினர்.

அப்போது ஸ்ரீ ஐயப்பன் வாபரனை அழைத்து வனத்தின் எல்லையான எருமேலியில் தங்கி இருக்குமாறும் தன்னை தரிசிக்க காடு வழி யாக சபரிமலை வரும் பக்தர்களை கொடிய வனவிலங்குகளிலிருந்து காத்து வருமாறும் கட்டளையிட்டார்.

புலிக்கூட்டங்களுடன் பந்தளம் திரும்பிய ஐயப் பன் பந்தளமன்னனுக்கு ஆன்மீக உபதேசம் அருளி னார்.

தமக்கும் (தர்மசாஸ்தா) வாபரனுக்கும் (பேட்டை சாஸ்தா) வித்தியாசம் இல்லை என்று கூறினார்.

எருமேலியில் வாபரனுக்கு ஒரு கோயில் அமைக்குமாறும் பணித்தார்.

பின் ஒரு அம்பு எய்தார் அந்த அம்பு விழுந்த இடத்தில் தனக்கு பதினெட்டு தத்துவ படிகளுள்ள ஒருகோவில் கட்டுமாறு கட்ட ளையிட்டுவிட்டு மறைந்தார்.

அதன்படி பந்தள மன்னன் பரிவாரங்களுடன் புறப்பட்டுச்சென்றார். அப்போது வாபரன் மன்ன னை சந்தித்து அவரை பொன்னம்பல மேட்டிற்கு கூட்டிச்சென்று தர்ம சாஸ்தாவிடம் சேர்த்தார்.

மன்னன் ஐயப்பனிடம் உபதேசம் பெற்றார்.

மன்னனுக்கு மனதில் இருந்த எஞ்சியிருந்த சந்தேகங்களும் தீர்ந்து தெளிவுபெற்றார் பந்தள மன்னன்.

ஸ்ரீ ஐயப்பனின் கட்டளையின்படியும் அகத்திய முனிவரின் உபதேசங்களின்படியும் முதலில் எருமேலியில் வாபரனுக்கும் பின் சபரிமலையில் ஸ்ரீ ஐயப்பனுக்கும் மஞ்சள்மாதாவிற்கும் கோயில் கள் அமைத்து பிரதிஷ்டை செய்து உற்சவமும் நடத்தினார்.

எருமேலியில் அமைக்கப்பட்டுள்ள கோயில் பேட்டை சாஸ்தா கோவில் என்றழைக்கப் படுகிறது.

பேட்டை சாஸ்தா என்பது வாபர ஸ்வாமி என்ற பூதத்தலைவன் ஆவார்

அன்று முதல் தன்னை வணங்கி பேட்டை துள்ளி காடு வழியாக சபரிமலை செல்லும் பக்தர் களை வனவிலங்குகளிடமிருந்து காப்பாற்றி கானகம் கடக்க துணை செய்து வருகிறார் வாபரஸ்வாமி.

புராணப்படி நடைபெற்ற நிகழ்வு இது தான். ஆனால் காலமாற்றத்தில் ஒருசில இடைச் செறுகல்கள் சேர்ந்து வாபரன் என்ற பேட்டை சாஸ்தாவை புறக்கணித்து வாவர் என்ற பொய் கதையை பரப்பிவிட்டுவிட்டனர்.

நமது பாரதநாடு பல நூற்றாண்டு காலம் கொள்ளைக் கூட்டங்களிடம் அடிமைப் பட்டுக் கிடந்தது

அக்காலத்தில் நம்நாட்டு மன்னர்கள் பல்வேறு நிர்பந்தங்களுக்கு பணிந்து கொடுக்க நேர்ந்தது அவ்விதமான ஏதோ ஒரு நிர்பந்தத்துக்கு ஆளாகிய அக்கால பந்தளமன்னன் ஒருவர்,

அமீர்காதி செய்னுதீன் பஹதூர் பாவா பாவர் முசலியார் என்ற முஸ்லீம் குடும்பத்திற்கு எருமேலியிலும் பதினெட்டாம்படியிலும் பள்ளி வாசல் அமைத்து ஐயப்ப பக்தர்களிடம் நிதிவசூல் செய்துகொள்ள அனுமதித்து செப்பு பட்டயம் வழங்கினார்.

எருமேலி பள்ளிவாசலில் சமாதி வைக்கப்பட் டுள்ள இஸ்லாமியரின் பெயர் பாபர் என்றும் பெதருதீன் என்றும் சிக்கந்தர்ஷா என்றும் அலி யார்தங்ஙள் என்றும் பலகருத்துக்கள் உள்ளன.

பள்ளிவாசல்களை அமைத்துக்கொண்டபின் ஐயப்பபக்தர்களிடையே வாவர் என்ற கதை பரப்பினார்கள். ஸ்ரீ ஐயப்பஸ்வாமி வாவர் என்ற கொள்ளையனை வென்று தோழனாக்கிக் கொண்டதாகவும் வாவர்சமாதியில் வணங்கி விட்டுத்தான் சபரிமலைக்கு செல்ல வேண்டும் என்றும் கதைகட்டினார்கள்.

> **1988-ல் ஆஸ்திக மணி கி.சுப்பிரமணிய அய்யர் வெளியிட்ட ஐயப்பன் பெருமை என்ற தமிழ் நூல் முதலிய பல நூல்களை பரிசோதித்ததில் வாவர் பற்றிய கதை ஒரு இடைச்செருகல் என்பது தெளிவாகிறது**

வாபர சுவாமிதான் பேட்டை சாஸ்தா என்பதை மறைத்துவிட்டு, அவரை வழக்கிலிருந்தே பக்தர்கள் மனதிலிருந்து மறக்கவைக்கப்பட்டார்.

வாபர சுவாமிக்கு பதில் வாவர் சமாதியை கும்பிட ஆரம்பித்தார்கள்.

ஸ்ரீ ஐயப்ப ஸ்வாமி பற்றிய மூலநூல் பூத நாதோபாக்யானம் என்ற சமஸ்கிருத நூல் ஆகும் இது பிரம்மாண்ட புராணத்தில் உட்பட்டது ஆகும்.

மலையாளத்தில் இதன் மொழிபெயர்ப்பு கல்லறயிக்கல் கிருஷ்ணன் கர்த்தா அவர்களால் 1928-இல் வெளியானது.

இந்நூலின் பெயர் பூதநாதோபாக்யானம் (கிளிப்பாட்டு) என்பதாகும். இதுவே முதல் மலையாளநூல்.

இரண்டாவதாக மூலநூலைத்தழுவி உரை நடையில் மலையாள மொழியில் பி.என்.கிரிஷ் ணுண்ணி என்பவர் 1938-இல் ஸ்ரீ பூதநாதன் என்ற நூலை வெளியிட்டார்.

மேற்கூறிய நூல்களில் வாபர சுவாமியைப்பற்றி கூறப்பட்டுள்ளது. வாவரைப் பற்றி எந்தச் செய்தியும் இல்லை

1946-இல் வித்துவான் குறுமள்ளூர் நாராயண பிள்ளை என்பவர் மலையாள மொழியில் பூதநாத சர்வஸ்வம் என்ற நூலை வெளியிட்டார்.

மேலும் 1984-ல் ஆசிரமம் தாமோதரன் என்பவர் வெளியிட்ட ஐயப்ப சர்வஸ்வம் என்ற மலையாள நூல் 1988-ல் ஆஸ்திக மணி கி.சுப்பிரமணிய அய்யர் வெளியிட்ட ஐயப்பன் பெருமை என்ற தமிழ் நூல் முதலிய பல நூல்களை பரிசோதித்ததில் வாவர் பற்றிய கதை ஒரு இடைச்செருகல் என்பது தெளிவாகிறது.

1938-க்கும் 1946-க்கும் இடையில் சூர்ப்பன் கவி, பாண்டிச்சேவம், பந்தளச்சேவம், இளவர் சேவம், பாலாழிமதனம், ஈழச்சேவம், வாவரங்கம் என்னும் பெயர்களில் மலையாள மொழியில் பல சாஸ்தாப்பாடல்கள் பாடப்பட்டன.

இதைப்படிக்கும் ஐயப்ப பக்தர்கள் பேட்டை சாஸ்தா என்ற வாபர ஸ்வாமியை அவசியம் வழிபட வேண்டும்.

# குபேர கிரிவலம்

பணக்கஷ்டத்தின் வேதனையை நாம் தினம் தினம் இல்லாவிட்டாலும், அடிக்கடியாவது உணர்கிறோம். இதற்கு பல நிரந்தரத் தீர்வுகள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமான ஒன்றுதான் குபேர கிரிவலம்.

## கிரிவலம் வரும் குபேர

ஒவ்வொரு தமிழ் வருடமும், கார்த்திகை மாதம் வரும் சிவராத்திரி அன்று வான் உலகிலிருந்து செல்வத்தின் அதிபதியான குபேரபகவான் பூமிக்கு வருகிறார். வந்து அவர் திரு அண்ணாமலையில் கிரிவலப்பாதையில் 7 வது லிங்கமான குபேரலிங்கத்துக்கு தினப்பிரதோஷ நேரத்தில் (மாலை 4.30 முதல் 6.00 வரை) பூஜை செய்கிறார். அப்படி பூஜை செய்துவிட்டு, இரவு 7 மணியளவில் குபேரபகவானே கிரிவலம் செல்கிறார். இது தொன்று தொட்டு நடைபெறுவதாக ஐதிகம்.

அதே நாளில் நாமும் கிரிவலம் சென்றால், நமக்கு அண்ணாமலையின் அருளும், சித்தர்களின் அருளாசியும், குபேரனது அருளும் கிடைக்கும். இதன் மூலம் நாம், நமது முன்னோர்கள் செய்த பாவங்கள் தீரும். நாம், நமது அடுத்த ஏழு தலைமுறையும் நிம்மதியாகவும், செல்வச்செழிப்புடனும் வாழும் பாக்கியம் கிடைக்கும்.

இந்த ரகசியம் பல நூற்றாண்டுகளாக மகான்களுக்கு மட்டுமே தெரிந்த ரகசியமாக இருந்தது. 2007 ஆம் ஆண்டில் ஜோதிடபூமி என்ற புத்தகத்தில் சென்னையில் வாழும் ஜோதிடர் பி.எஸ்.பி.அய்யா அவர்கள் எழுதியுள்ளார்.

**இதன்படி இந்த ஆண்டின் குபேர கிரிவலம் 5.12.2018 புதன் அன்று வருகிறது.**

இந்த நாளில் கிரிவலம் சென்றால் அடுத்த ஒரு வருடத்திற்கு நமது வருமானம் நியாயமான விதத்தில் அதிகரிக்கும். என்றும் தெளிவாக கூறியுள்ளார்.

தற்போது இந்த குபேர கிரிவலம் மிகுந்த சிறப்புடன் நடைபெற்று வருகிறது.

இந்த ஒரு மணி நேரத்தில் குபேர லிங்கத்தை தரிசிக்க இயலாவிட்டால் வருத்தப்பட வேண்டாம்; மானசீகமாக குபேர லிங்கம் இருக்கும் இடத்தை நோக்கி வேண்டிக் கொண்டால் போதும்.

இரவு 7மணி ஆனதும் குபேர லிங்கத்தில் இருந்து புறப்பட்டு குபேரலிங்கத்தில் கிரிவலத்தை நிறைவு செய்ய வேண்டும்.

கிரிவலம் செல்லும் போதே, அருணாச்சலேஸ்வரரை தரிசித்து விட்டு செல்லலாம் அல்லது கிரிவலம் முடித்த பிறகும் தரிசித்துவிட்டு செல்லலாம்.

ஏதாவது ஒரு சூழ்நிலையால் அருணாச்சலேஸ்வரரை தரிசிக்க முடியாமல் போனாலும் தப்பில்லை.

கிரிவலம் முடித்ததும் வேறு எந்த கோவிலுக்கும் செல்லாமலும், பிறர் வீடுகளுக்குச் செல்லாமலும் நேராக





அவரவர் வீடு திரும்ப வேண்டும்.

கிரிவலம் செல்லும் போது செருப்பு போடக்கூடாது. ருத்ராட்சம் அணிந்து, வேட்டி சட்டை (பெண்கள் அவரவர் பாரம்பரிய உடை) அணிந்து சிவ மந்திரங்களை மனதுக்குள் ஜபித்தவாறு கிரிவலம் செல்ல வேண்டும். கிரிவலம் முடிந்து அன்று இரவு கண்டிப்பாக அண்ணாமலையில் தங்க வேண்டும் என்பது ஐதீகம். தங்கி, மறு நாள் வேறு எங்கும் செல்லாமல் அவரவர் ஊருக்குச் செல்ல வேண்டும் என்பது எழுதப்படாத சம்பிரதாயம். அப்படி செய்தால் மட்டுமே குபேரகிரிவலத்தின் பலன் நமக்குக் கிடைக்கும்.

### பேசாமல் கிரிவலம் வருவது சிறப்பு:

கிரிவலப்பாதையான 14 கி.மீட்டர்கள் முழுக்க ஏராளமான சித்தர்கள் வாழ்ந்துவருகிறார்கள். நமது வீண் பேச்சு அவர்களுக்கு தொந்தரவாக இருக்ககூடாது அதனால் கிரிவலம் வரும்போது வீண் கதைகள் பேசிக்கொண்டு வராமல் இறை சிந்தனையுடன் வலம் வருவது மிகவும் சிறப்பு!



## குபேரன் பெயரில் தீர்த்தம்...

கும்பகோணம் மகாமகக் குளத்தில் மொத்தம் 66 கோடி தீர்த்தங்கள் உள்ளன. அவற்றில் 20 தீர்த்தங்கள் மட்டுமே வெளியில் தெரிபவை. அவற்றில் ஒன்றுதான் குபேர தீர்த்தம். ஒவ்வொரு வருடமும் மாசி மக தீர்த்த உற்சவத்தின்போது குபேரன் இந்த தீர்த்தத்தில் தங்கி அனைவருக்கும் அருள்வதாக ஐதீகம். இந்திர தீர்த்தத்திலிருந்து சுற்றில் 6வதாக உள்ளது.



## குபேரனுக்கு மருத்துவரான பிள்ளையார்

பணத்திற்கு அதிபதியாக நாம் குபேரனைப் குறிப்பிடுகிறாம். அவர் திருப்பதி வெங்கடாசலபதிக்கே கடன் கொடுத்தவர். ஒரு காலத்தில் குபேரன் எவருக்கும் பணத்தைத் தராமல் மூட்டை கட்டி வைத்திருந்தார். இதனால் பாவம் சேர்ந்து தொழு நோய் வந்து விட்டது. தன் நோய் குணமாக விநாயகரை வணங்கினார். அவருக்குப் பிள்ளையார் அருகம்பில்லை அரைத்து மருந்தாக கொடுத்து நோயை குணமாக்கினார். அதன் பிறகே குபேரன் மக்களுக்குப் பணத்தை வாரி இறைந்தார். எனவே விநாயகப்பெருமானை லட்சுமி குபேர கணபதியாக வழிபட்டால் குபேரனுடைய திருவருள் கிடைக்கும்.



aanmeegamalar.com
இணையதளத்தின்
mobile app
GET IT ON Google Play

அனைத்து செய்திகளும், இ-புத்தகத்தையும் இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!

கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள், உடல்நலன், பலன்கள், இ-புத்தகம் போன்றவற்றை எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில் பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.

அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்



# முருகன் உணர்த்தும் தத்துவம்

பழனி முருகன் கோவிலில் சாதாரண நிலையில் இருக்கும் வடிவத்தைப் பார்ப்பதைவிட ராஜ அலங்காரத்தை நிறைய பேர் பார்க்கிறார்கள். இதுபோன்று தேர்ந்தெடுத்துப் பார்ப்பது என்பது சரியானதா?

பொதுவாக இறைவனை பல தேவைகளுக்காக வேண்டுகிறோம். அதில் முற்றும் துறந்த தவ நிலை, அதாவது அலங்காரம் இல்லாமல் ஆண்டிக் கோலத்தில் பார்க்கும்போது நமக்குள் ஒரு மெய்ஞானம் உண்டாகும் என்பதற்காக. பெரிய ஞானிகளெல்லாம் அந்தக் கோலத்தைக் காண்பதற்காகத்தான் துடிப்பார்கள். முற்றும் துறந்தவர்கள், குடும்பத்தில் பல நிலைகளைக் கடந்தவர்கள் இவர்களெல்லாம் அந்தக் கோலத்தை விரும்பிப் பார்ப்பார்கள்.

நாரதர் தேவலோக மாங்கனியைக் சிவனாரிடம் கொடுத்து அதை யாருக்கு கொடுக்க வேண்டும் என்ற கேள்வி எழுந்ததுமே, ஞானக்குழந்தைகளான கணபதி, முருகன் இருவரும் சட்டென்று தங்களுக்கே உரியது என்றார்கள்.

ஈசன் சிந்தித்தார், உங்களில்உலகை முதலில் சுற்றி வருபவர் யாரோ, அவருக்கே இந்த பழம், அப்புறம் போட்டியில் வென்றவர்கள் யாரோ அவருக்கே இது சொந்தம் எனக் கூற, உலகை சுற்ற வேண்டும் என்றாலும், ஈசன் படைத்த ஏழு உலகங்களையும் வலம் வர மயிலேறி புறப்பட்டார், முருகன். கணபதியோ, எல்லா உலகங்களையும் தன்னுக்குள்ளே அடக்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சிவ சக்தியை சுற்றி அம்மையப்பனை வலம் வந்து, கந்தன் வரும்முன்பே கனியை பெற்றுக் கொண்டார் கணபதி.

கந்தன் வந்தார், அண்ணன் கையில் கனியைக் கண்டார். அது எப்படி அவருக்கு கிடைத்தது என்பதை தெரிந்து கொண்டார். உமா மகேஸ்வரனே உலகங்கள் அனைத்தும் என்ற உண்மை தனக்கு தெரியாமல் போனதை ஒரு கணம் எண்ணினார். அதற்கான காரணத்தை ஆராய்ந்தார், அண்ணன் கணபதி பிரணவ வடிவம், ஞானஸ்வரூபன், அவரிடமே இதற்கு காரணம் கேட்டார்,

அனைத்து உலகங்களையும் அம்மை அப்பனில் காணும் ஆற்றல் விநாயகருக்கு இருந்தது, தவத்தின் பலனாய் பெற்ற ஞானம்தான் அந்த ஆற்றலுக்கு காரணம் என்பதை உணர்ந்து பூலோக தவக் கோலமே பழனியாண்டி ரூபம்.

அண்ணனைப் போலத் தானும் தவமியற்றி, ஞானஸ்கந்தனாக விரும்பியதன் விளைவே அந்த ஆண்டி வேடம். சூரனை அழிக்கும் வீர சக்தியுடன் சிவனாரின் நெற்றிக்கண்ணில் உதித்த குமரன், ஞானக்கடவுளாகி, ஞாலத் தை காக்க எடுத்துக் கொண்ட பற்று அற்ற திருக்கோலம் பழநி ஆண்டிக் கோலம், “கனி கிடைக்கவில்லை” என்ற கோபத்தில் ஆண்டி யாகவில்லை. தன்னை வழிபடுவோர்க்கு எல்லாம் அதனை வழங்குவதற்காக விரும்பி, ஏற்றுக் கொண்ட வடிவமே அந்த ஆண்டி வடிவம். கந்தனின் தவம் தொடங்கியது. பிரணவம் அவருள் அடங்கியது, ஞானம் அவர் மூச்சாயிற்று. அழகும் அறிவும் அவருள் ஒளிவீசியது.

மு.கிருஷ்ண மோகன் (ஸ்ரீ கால பைரவி ஜோதிட நிலையம் போன்: 8526223399)



## இது கூட நிரந்தரமல்ல அரசன் ஆண்டி கோல ரகசியம்

ஆறுபடை வீடுகளில் பழனி முருகன் மட்டும் தினமும் இரண்டு வடிவங்களில் காட்சி தருகிறார், ஒன்று இராஜா அலங்காரம், இரண்டு ஆண்டி வடிவம், மாலையில் இராஜ அலங்காரத்தில் காட்சி தரும் முருகன், காலையில் ஆண்டிக்கோலத்தில் காட்சிதருவார்.

இதில் மிகப்பெரிய உண்மை புதைந்துள்ளது, நேற்று இருந்தது இன்று இல்லை, இந்த கோவணம் கூட கடைசிவரை நம்முடன் வராது என்பதை பக்தர்களுக்கு உணர்த்தவே முருகன் இந்த இரண்டு வேடங்களில் காட்சிதருவதாக கூறப்படுகிறது.

# வாழ்க்கை நமது கண்ணீருக்கு அருகதையற்ற ஓர் கனவு



அன்பிற்குரிய குருதேவர் அருளுகிறார்: "நான் எவ்வளவு அதிகம் வாழ்க்கையைப் பார்க்கிறேனோ அவ்வளவு அதிகம் அது ஒரு கனவு என்பதை உணர்கிறேன். இப்பொழுது நான் உங்களுக்குக் கூறப்போகும் வேதாந்த தத்துவத்தில் நான் மிகப்பெரிய உத்திரவாதத்தை கண்டிருக்கிறேன். நீங்கள் இறைவனது கருணையால் மட்டுமே வாழ்கிறீர்கள் என்பதை உணருங்கள். அவனது எண்ணத்தை அவன் பின்வாங்கிக்கொள்கிறான் என்றால் ஸ்தூல வெளிப்பாட்டின் இருப்பு நின்றுவிடும். இந்த உலகம் ஒரு கனவு பிரதேசம்.

மேலும் நாம் அனைவரும் இங்குகனவு கண்டுகொண்டிருக்கிறோம். இந்த வாழ்வு உண்மையானதல்ல. நீங்கள் மிகப்பெரிய மாயையில் சிரித்துக் கொண்டும், அழுது கொண்டும் இருக்கிறீர்கள்.

மேலும் எதைப்பற்றியும் கண்ணீர் வடிப்பது உபயோகமற்றது. நமது உலக அனுபவங்களுக்கு மெய்ம்மையை அளிப்பது சொல்லவொண்ணா துயரத்தை வரவழைப்பதற்கொப்பாகும். இந்த உலகுடன் நமது உணர்வு நிலையை ஐக்கியப்படுத்திக்கொள்வதன்மூலம் நாம் அதை ஒரு துன்பமிக்கஇடமாகப்பார்க்கிறோம்.

எது நம்மை துன்பத்திலிருந்து விடுவிக்கப்போகிறது? பணம் அவ்வாறு செய்யுமா? எந்த லௌகீகப் பொருளாலும் செய்ய முடியாது. இறைவனைப் பற்றிய அறிவு மேலும் நாம் என்றுமே அவனுடன் ஒன்றுபட்டிருக்கிறோம் என்ற ஞானம் மட்டுமே விடுதலைக்கான ஒரே வழி. இதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். இந்த உலகம் உண்மையென்றால், நிச்சயம் இறைவன் மிகக் கொடுரமாக இருப்பான். ஆனால் நாம் போதுமான தடவைகள் துன்பம் மற்றும் இறப்பு எனும் உலையின் வழியே சென்றபிறகு நாம் விழித்துக்கொண்டு மாயையை வெற்றிகொள்வோம் என்று அவனுக்குத் தெரியும். இந்த பூமி அவனது கனவு என்று உணர்வோம். இனிமேலும் மறு பிறவி எடுக்கமாட்டோம். பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணன் மூலம் இந்த வாக்கை அளித்தவண்ணம் இறைவன் பேசுகிறான்:"



எனது பக்குவப்பட்ட மகாத்மாக்கள் என்னை (பரமாத்மாவை) அடைந்து, ஒப்பற்ற வெற்றியை எய்துகிறார்கள். அவர்கள் துன்பத்தையும், நிலையற்ற தன்மையையும் கொண்டுள்ள இந்த இருப்பிடத்தில் மறுபிறப்பை எடுப்பதில்லை. "(பகவத் கீதா அத்யாயம் 8 ஸ்லோகம் 15)

ஒரு மனிதன் வெடிகுண்டால் தாக்கப்பட்டு அக்கணத்திலேயே கொல்லப்படுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். போர்க்களத்தில் அவர் அச்சம் நிறைந்தவனாக இருந்தான்; ஆனால் மரணத்திற்குப் பின் அவன், தான் அச்சத்திலிருந்தும், தேகமெனும் கல்லறையிலிருந்தும் விடுதலை அடைந்ததை மகிழ்ச்சியுடன் உணர்ந்தறிகிறான். இந்த ஞானத்தைப் பெறுவதற்கு ஒருவன் கடும் சோதனையை அனுபவிக்க அவசியமில்லை. ஞானத்தை உணர்வு பூர்வமான ஆன்மீக முயற்சியின் வாயிலாகப் பெறுவது மிகவும் சிறந்தது. மேலும் சோதனைகளை நாம் தாங்க வேண்டியிருந்தால் நாம் அவற்றை சரியான மனோபலத்துடன் தாங்கவேண்டும்.

வாழ்வு மற்றும் சாவு என்னும் மாயையை இவ்வாறு பார்ப்பது ஓர் அற்புதமான வழி இல்லையா? அதுதான் ஒரே வழி. பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு தன் ஞான ஒளியூட்டும் பிரசங்கத்தை, சடப்பொருளின் நிலையற்ற தன்மை மற்றும் அதனுள் உறையும் மெய்ப்பொருளின் சாசுவதத் தன்மையை நினைவில்கொள்ளவேண்டும் என்ற புத்திமதி கூறினார்".

குருதேவர் கூறுவதை ஊன்றிக் கவனிக்கும்போது தெரியவருவது என்னவென்றால், நாம் காணும் இந்த மொத்த உலகமும் உலகப் பொருட்களும் வாழ்க்கையும் வாழ்வினுள் மறைந்திருக்கும் இன்பமும் துன்பமும் நோயும் பிறப்பும் இறப்பும் மற்ற எல்லா பிணிகளும் 'கனவே' என்பதுதான். நாம் அனைவரும் அந்தக் கனவிலிருந்து விழித்தெழவேண்டும் என்று உணர்த்துகிறார். அதற்கான ஒரு சிறிய கதையைக் கூற விரும்புகிறேன்.

ஒரு காலத்தில் இங்கிலாந்து நாட்டை ஆண்டுகொண்டிருந்த அரசனுக்கு மந்திரியாக பல காலம் பணியாற்றி வந்த ஒருவர் திடீரென்று ஒரு நாள், "அரசே, நான் இனி இந்த அரண்மனையில் வசிக்க விரும்பவில்லை. நான் காட்டிற்குச் செல்ல உள்ளேன்," என்று கூறினான். அதைக் கேட்ட அரசன். "நீ இந்த அரண்மனை வாழ்க்கையை துறந்து கல்லும் முள்ளும் நிறைந்த காட்டிற்கா செல்ல உள்ளாய்? வேண்டாம் இங்கே இருப்பாய்" என்றார், "இல்லை அரசே, நான் போகத்தான் போகிறேன்" என்றான் மந்திரி. வேறு வழியின்றி "சரி" என்றான் அரசன். மந்திரியும் அரண்மனையை விட்டுச் சென்றான். சிறிது நாட்கள் கழித்து, தம்மிடமிருந்து பிரிந்துச் சென்ற மந்திரியைப் பார்க்கக் காட்டிற்குச் செல்ல அரசன் தீர்மானித்து பின் காட்டிற்குச் சென்றான். ஒரு கிழிந்த பாயில் தலையணையின்றி படுத்துக்கொண்டிருந்த மந்திரியைப் பார்த்து அரசன், "நீ அரண்மனையில் எவ்வளவு சுகபோகமாக வாழ்ந்தாய்! அப்படிப்பட்ட நீ இப்போது ஒரு தலையணைகூட இல்லாமல் கிழிந்த பாயில் ஒரு சிறிய துணியை உடுத்தவண்ணம் படுத்துக் கொண்டிருக்கிறாயே! நீ இப்போது என்னுடன் வா, அரண்மனைக்குச் செல்வோம்" என் றான், "இல்லை, நான் வரமாட்டேன்.அந்த அரண்மனை வாழ்க்கையைவிட இந்த வாழ்க்கை எனக்கு எவ்வளவோ மேலாக இருக்கிறது. நான் இவ்வளவு காலம் உங்களுக்காகப் பணியாற்றினேன். அதனால் எனக்கு என் உடல் நலம் பாதிக்கப்பட்டது.

46
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com

GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.

ஆன்மிகமலர்.காம்



நானும் இறக்கப்போகிறேன். இந்த நிலையில் நான் உங்களுடன் அரண்மனைக்கு வந்தால் உங்களால் எனக்கு என்ன செய்ய முடியும்? ஒன்றுமே செய்ய முடியாது என்று எனக்குத் தெரியும்'' என்றான் மந்திரி. "இல்லை இல்லை நான் உனக்கு எல்லாம் செய்கிறேன், உனக்கு என்ன வேண்டும் என்று சொல், நான் செய்கிறேன்'' என்றான் அரசன். உடனே மந்திரி, "எனக்கு ஒரே ஒரு விண்ணப்பம், அது என்னவென்னால் இன்றைக்கு நான் இறக்கப்போகிறேன்; நாளைக்கு ஒரு நாள் மட்டும் என்னு டைய வாழ்க்கையை நீடித்துத் தர உங்களால் முடியுமா? ஒரு நாள் அதிகமாக வாழ நான் ஆசைப்படுகிறேன்'' என்றான் மந்திரி. "அது என்னால் முடியாது'' என்று அரசன் பதிலளித்தான். அதைக் கேட்ட மந்திரி "ஆனால் இவ்வளவு காலம் நான் அரண்மனையில் உங்களுக்காகப் பணி செய்ததற்கு என்ன பயன்? உங்களால் ஒரு நாள்கூட நீடித்துத் தர முடியவில்லையே'' என்று அரசனிடம் கூறி மிகவும் வருத்தப்பட்டான்.

அன்புக்குரிய வாசகர்களே பாருங்கள்! ஒரு நாள் மட்டும் மந்திரியின் ஆயுளை நீடித்துத்தர அரசனால் முடியாது என்று கூறினான். ஆனால் யாரால் முடியும்? அது இறைவனால் மட்டும்தான் முடியும். அவ்வளவு நாட்கள் அதாவது தன் வாழ்வின் முக்கால் பங்கும் அரசனுக்காக பணி செய்த பின்னரும் கூட அரசனால் மந்திரியின் ஆசையை நிறைவேற்றுவதற்கு முடியவில்லை. அதே சமயம் அந்த நாட்களை இறைவனுக்காக பணி செய்திருந்தால், இறைவனுக்காக நேரத்தை ஒதுக்கியிருந்தால் இறைவன் அவனுக்கு ஒரு





நாள் என்ன, மரணமில்லாப் பெருவாழ்வினை அருளியிருப்பான் என்பது உறுதி. யார் இறைவனுக்காக வாழ்கின்றானோ அவனுடைய உலகப்பற்றினை அறுத்துவிட்டு பிறப்பையும் அறுத்துவிட்டு எல்லாம் வல்ல இறைவன் அவனை தன்னுடன் சேர்த்துக் கொள்வான்.

மனுஷ்யாணாம் ஸ்ஹஸ்ரேஷூ
கச்சித்யததி சித்தயே
யத தாமபி ஸித்தானாம் கச்சின்மாம்
வேத்தி தத்வத:

பகவான் அருளுகிறார்: "எத்தனையேகோடிக் கணக்கான மனிதர்களில் மிகக்குறைவான சிலர் மட்டும்தான் ஆத்மஜ்ஞானத்திற்காகவும் இறை அனுபூதிக்காகவும் முயற்சிக்கின்றனர். எல்லா கால தேசங்களிலும் மனிதர்கள் மிக எளிதாக பிறந்து, வாழ்ந்து, இறக்கின்றனர். ஆனால் அவர்களில் பெரும்பான்மையினரும் உணவு முதற்கொண்ட சரீர தர்மங்களாலும் ஆசைகளை நிறைவேற்றுவதற்கான பிணி யினால் ஆயுளை நாசம் செய்கின்றனர். பிறப்பிலிருந்துள்ள விடுதலை என்ன என்பது கூட அறியவில்லை. மிகக் குறைவானவர்கள் அதைப்பற்றி தெரிந்தாலும் அதற்காக செயல்பட்டு பலனை அடையமுடியாமல் போகி றார்கள். ஆனால் ஏதாவது சில காலத்தில் சில தேசத்தில் மிகவும் குறைவான சில நபர் கள் மட்டும் அதை நன்கு அறிந்து அதை பயனுள்ளதாக்குவதற்கு உலகத்திலுள்ள மாயை யாகின்ற பொருட்கள் அனைத்தையும் துறந்து, பரமாத்மாவை சரணடைவதற்காக அதாவது இறைவனை சரணடைவதற்காக தினமும் முயற்சி செய்கின்றனர்.

அவ்வாறு முயற்சிக்கின்ற புண்யாத்மாக் களான மனிதர்களில் ஆயிரத்தில் ஒருவர் ஆத்மானுபூதி பெறுவதற்கான மிகச்சரியான மார்க்கத்தைச் சரியாக அறிந்து மிகவும் எளிதில் லட்சியத்தை அடைகின்றார். எவ்வளவு உண்மையும் உன்னதமுமானதே இந்த ஆத்ம ஞானமும் ஆத்மசாக்ஷாத்காரமும்! எனவே அர் ஜூனா, இதை நீ மிகவும் சிரத்தையுடன் கேட்க வேண்டும்! (பகவத்கீதா அத் 7 ஸ்லோகம் 3)

எனவே, மனிதனாகப்பிறந்த அனைவரு டைய முக்கிய கடமை இறைவனை தேடுவதும் அவனை அடைவதுமாகும்.

ஜெய் குரு

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

ஆன்மீகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com

# ‘நான்’

## பல சக்திகளின் கூட்டு வார்த்தை

நான் என்பது என்ன நீ இதைப் பற்றி அமைதியாக சிந்தித்துப் பார்த்திருக்கிறாயா

அது உன்னுடைய காலா, கையா, அல்லது உன்னுடைய இதயமா, தலையா அல்லது இது வெறும் அகங்காரமா?

எது உன்னுடைய “நான்”? எங்கே உன்னுடைய “நான்”? உன்னுடைய ஆணவமா?

அது அங்கிருத்தலின் உணர்வு இருக்கிறது, ஆனாலும் அதை குறிப்பாக எங்கேயும் காண முடிய வில்லை.மௌனமாக ஒரு நிமிடம் அமர்ந்து அந்த ‘நானை’ தேடிப் பார்.



நீ ஆச்சரியமடைவாய்.

எவ்வளவு ஆழமாக தேடினாலும் உன்னை எங்கும் கண்டு பிடிக்க முடியாது.

ஆனால் ஆழமாக தேடும்போது ‘நான்’ என்று ஒன்று இல்லை என்பதை உணர்வாய்.

அது போல

ஆணவம் என்பதும் கிடையாது.

சுயத்தின் உண்மை அங்கிருக்கும்போது ‘நான்’ அங்கிருக்காது.

எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்ட நான்சென் என்ற ஞானியை அப்போதிருந்த மாமன்னன் மாலிண்ட் தனது அரசவைக்கு அழைத்தான்.

தூதுவன் நான்சென்னிடம் சென்று, “குரு நான்சென் அவர்களே, அரசர் உங்களை காண விரும்புகிறார். நான் உங்களை அழைப்பதற்காக வந்திருக்கிறேன்.” என்றான்.

நான்சென், “நீ விரும்பினால் நான் வருகிறேன், ஆனால் நான்சென் என்று யாரும் இங்கு இல்லை. அது வெறும் ஒரு பெயர்தான், ஒரு தற்காலிக குறியீடு.” என்றார்.

தூதுவன் அரசரிடம் சென்று நான்சென் ஒருவித்தியாசமான மனிதர், அவர் வருவதாக ஒத்துக் கொண்டார், ஆனால் நான்சென் என்று யாரும் இல்லை என்று அவர் கூறியதைக் கூறினான்.

மாமன்னன் ஆச்சரியமடைந்தான்.

நான்சென் வருவதாக கூறிய நேரத்தில் தேரில் அழைத்து வரப் பட்டார்.

மன்னன் வாசலில் நின்று அவரை, “குரு நான்சென் அவர்களே, வாருங்கள், வாருங்கள்!” என வரவேற்றான்.

இதைக் கேட்டவுடன், துறவி சிரித்தார்.

“நான்சென்னாக நான் உன்னுடைய வரவேற்பை ஏற்றுக் கொள்கிறேன், ஆனால் நினைவில் கொள், நான்சென் என்ற பெயருடைய யாரும் இங்கு இல்லை.” என்றார்.

அரசன், “நீங்கள் வித்தியாசமாக பேசுகிறீர்கள், நீங்கள், நீங்கள் இல்லை என்றால் யார் என்னுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டது? யார் என்னுடைய வரவேற்புக்கு பதில் சொல்வது?” என்று கேட்டான்.

நான்சென் பின்னே திரும்பி பார்த்து கேட்டார், “நான் வந்த ரதம் அதுதானே?”

“ஆம், அதுவேதான். இதுதான்”

“தயவுசெய்து குதிரைகளை கழற்றி விடுங்கள்” என்றார்.

அது செய்யப்பட்டது.

குதிரைகளை காட்டி, “அது ரதமா?” என்று கேட்டார் நான்சென்.

அரசர், “குதிரைகளை எப்படி ரதம் என்று அழைக்க முடியும்?” என்று கேட்டார்.

துறவி கூறியதின் பேரில் குதிரைகளை கட்டும் நுகத்தடி கழற்றப்பட்டது.

“அந்த நுகத்தடிதான் ரதமா?” என்று துறவி கேட்டார்.

“அது எப்படி?, அவை நுகத்தடிகள், அது ரதமல்ல.”

துறவி கூற கூற, ஒவ்வொரு பாகமாக கழற்றப்பட்டது, ஒவ்வொரு பாகமாக கழற்றப்பட, பட அரசரின் பதில் “இது ரதமல்ல” என்பதாக இருந்தது.

கடைசியில் ஒன்றும் மிச்சமில்லை.

துறவி, “எங்கே உனது ரதம்? ஒவ்வொரு பாகம் எடுத்துச் செல்லப் பட்டபோதும் இது ரதமல்ல என்று நீயே கூறினாய். ஆகவே இப்போது சொல், உனது ரதம் எங்கே?” என்று கேட்டார்.

அரசரிடம் ஒரு நிலைமாற்றம் நிகழ்ந்தது.

துறவி தொடர்ந்தார், “நான் சொல்வதை புரிந்து கொண்டாயா? ரதம் என்பது ஒரு கூட்டுமுயற்சி.

சில குறிப்பிட்ட விஷயங்கள் சேர்ந்த சேகரிப்பு.

ரதம் என்பது தனித்து இருப்பதல்ல.

இப்போது உள்ளே பார். எங்கே உனது ஆணவம்?, எங்கே உனது ‘நான்’?.

நீ எங்கேயும் ‘நானை’ கண்டு பிடிக்க முடியாது. அது பல சக்திகள் ஒன்று சேர்ந்த ஒருமித்த ஒரு வெளிப்பாடு.

அவ்வளவுதான். ஒவ்வொரு உறுப்பையும் எண்ணிப்பார், உன்னுடைய ஒவ்வொரு பார்வையை பற்றியும் நினைத்துப்பார், பின் ஒவ்வொன்றாக வெளியேற்று, இறுதியில் ஒன்றுமற்றது தான் இருக்கும்.






ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033

♦♦♦

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033



# கர்மம் உபாசனை

மூன்று வழியில் பூமியில் இறைவனை கட்டாயம் பற்றிக் கொள்ள வேண்டும். எடுத்துக் கொண்டால் தான் முடியும். வாழ்க்கை என்னும் சமுத்திரத்தில் கழுத்துவரை நீர். அதற்கு மேல் உள்ள பகுதிக்குத்தான் அழகு. பொட்டு/ திருநீறு இட்டுக் கொள்ளலாம். மற்றதை மறைத்துக் கொள்கிறோம். மூன்று வழியாகத்தான் இறைவனைப் பற்றிக் கொள்ளலாம்.



ஒரு மார்க்கம் கர்மம். சத்கர்மம் நல்ல பொருளை பற்றிக் கொள்ளும். துஷ்கர்மம் தேவையில்லை. மக்கள் விரும்பமாட்டார்கள். இது சமாதானமாக போய்க்கொண்டிருக்கிற உலகம், வீரமான சமுதாயமல்ல.

கர்மா உடம்பில் ஒட்டும். மனதில் (ஒட்டினால்) அதற்கு ரொம்ப வலிமை ஜாஸ்தி. இது வெளியில் ஓடிவிடும். வெளியில் ஓடாமல் உள்ளே வலிமை பெற்றால், ஆன்மக்கோட்டை வளரும். சக்கரம்/யந்திரம்/மந்திரம் வேண்டாம். ஆன்மக் கோட்டை வெற்றியாகும். இதைத் தொட்டாலும், தொடாவிட்டாலும் வெற்றி. உதாரணம் ஈசல் 'பிரைட்நெஸ்' அதிகப் பிரகாசம். சாயங்காலம். ஆனால், 'ஜில்' என்று ஓடும்.

கர்ம மார்க்கத்தில் மன உடம்பிற்குள் ஒன்பது ரசம். வீரம் மனதில் இருக்க வேண்டும். இது மன/ஆன்ம உடம்பில் பரவியிருக்க வேண்டும். மத்தியில் உயிர் பார்த்துக் கொண்டு இருப்பது 'சாட்சி பூதம்' மாவிளக்கு மாவில் எரிகின்ற தீபம் போல்.

எல்லாம் உடம்பிற்குள் தான். இதை தத்ரூபமாக பார்த்துக் கொண்டு இருப்பவன் இறைவன். ஒன்று கர்மமார்க்கம். இரண்டு உபாசனா மார்க்கம். மேல் நோக்கான பார்வை/ எண்ணம் இருந்தால், எந்த உபாசனா மார்க்கமும் வேண்டாம். எல்லா உண்மையும் தெரியும். மழைத்துலீறல் விழுந்து இருக்கும். இது போல் பகவான் பூமியில் வளர்ச்சியை ஏற்படுத்தி விடுகிறான். வித்து விதை.

மழை பெய்யவில்லை, வளரவில்லை என்றால் கர்மா . துலீறல் விழும்போது 'ஜோதி' நினைவு . சுத்தமாக ஈரம் பட்ட உடனே வித்து எடுத்துக் கொண்டு வளர ஆரம்பிக்கும் நெய்யில் தீபம் எரிவதுபோல். வித்தியாசமான இரண்டு மண்ணில் வித்து, மழை பெய்தாலும் வளராது. வித்துக்கள் இருக்கின்றது எனில் அனுக்கிரகம் கிடைத்தது, ஆனால் பயன்படவில்லை. அப்போது திருமூலர்/மஸ்தான் இவர்களிடம் வந்தே ஆகவேண்டும். இதுபோல பகவானை நினைக்க வேண்டும்.

உபாசனா மார்க்கம் கட்டாயம் வேண்டும்.

'மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் வணங்குவோர்க்கு வார்த்தை சொல்ல சத்குருவும் வாய்க்கும் அன்றோ பராபரமே!' வார்த்தை சொல்ல சத்குரு வேண்டும். தத்துவத்தைச் சொன்னால் கேட்பார்கள். சக்கரம் போட்டால் உபாசனா மார்க்கம். தள்ளிப் போய்க்கொண்டிருந்தால் ஜபித்துக் கூப்பிடுவது. எல்லா தெய்வமும் உபாசனா மார்க்கத்தில் வந்துவிடுவார்கள். உபாசனா மார்க்கம் ஞான மார்க்கத்தை இழுத்துவிட்டால் பரமசுகம் இதை பூமியில் எல்லோர்க்கும் சொல்.

# சீடன் கேள்வி ஞானி பதில்

**சீடன்:** குரு சன்னதி, ஆண்டவன் சன்னதியில் எப்படி இருக்க வேண்டும்?

**ஞானி:** சாமி இருக்குமிடத்தில் எந்த விதமான அசிங்கமும் பண்ணாதவனே சுத்தமான பக்தன் ஆத்மா.

**சீடன்:** ஆனால் குருவும் , ஆண்டவனும் எல்லோரையும் ஒன்றாகப் பார்க்கிறார்களே?

**ஞானி:** உலகத்திலுள்ள ஆத்மாக்கள் எல்லாவற்றையும் ஆண்டவன் பார்க்கிறான். இது உண்மை. இதை நீங்கள் கவனமாகப் பார்க்க வேண்டும். அப்பொழுது தான் அது நியாயம் என்று தெரியும்.

**சீடன்:** கடவுளை பூதங்களாகத் தான் பார்க்க வேண்டுமா?

**ஞானி:** அது உன் இஷ்டம். நாலு பைசாவை வைத்து குடியிருக்கலாம். நாலு பூதங்களை வைத்துக் கொண்டு குடியிருக்க முடியுமா? இறைவனின் படைப்பான பஞ்ச பூதங்களும் முக்கியமானவையே.

**சீடன்:** நடைமுறைக்கு இவைகளெல்லாம் ஒத்து வரவில்லையே?

**ஞானி:** வீட்டில் கஷ்டம், ஆத்மசாதனை செய்ய முடியவில்லை என்று சொல்லாதே. விருப்பமில்லை அவ்வளவு தான். உடம்பின் நினைவோடு தானே இருக்கிறோம். எப்பொழுது உடம்பின் நினைவை மறக்கிறோமோ, அப்பொழுது உள்ளே உள்ள கடவுள் நம் உடம்பை நினைத்துக் காக்கிறான். அப்பொழுது எல்லாம் ஒத்து வரும்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028



ஆன்மிகமலர் மெயில் புக்

## ஐந்துவிதமான பலனை தரும்

# பஞ்சமுக ஆஞ்சநேயர்

ஒரு முறை ராமருக்கும், ராவணனுக்கும் போர் நடந்தது. இதில் ராவணன் நிராயுதபாணியானான். இதனால் ராமர் ராவணனை கொல்ல மனமின்றி,"இன்று போய் நாளை வா' என திருப்பி அனுப்பிவிட்டார். ராமர் இவ்வாறு செய்தது தன்னை திருத்துவதற்குத்தான் என்பதை ராவணன் உணரவில்லை. மீண்டும் ராமருடன் போர் செய்ய நினைத்த ராவணன், "மயில் ராவணன்' என்ற மற்றொரு அசுரனது துணையுடன் போருக்கு கிளம்பினான். ராமரை அழிப்பதற்காக மயில் ராவணன் கொடிய யாகத்தை நடத்த திட்டமிட்டான்.

இந்த யாகம் நடந்தால் ராம லட்சுமணனின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதை உணர்ந்த விபீஷணன், யாகத்தை தடுத்து நிறுத்த ஆஞ்சநேயரை அனுப்பும்படி ராமரிடம் கூறினான். ராமர் கூறியதன் பேரில் ஆஞ்சநேயர் யாகத்தை தடுத்து நிறுத்த கிளம்பும் முன் நரசிம்மர், ஹயக்கிரீவர், வராகர், கருடன், ஆகியோரை வணங்கி ஆசி பெற்றார்.இந்த தெய்வங்கள் அனைவரும் போரில் அனுமன் வெற்றிபெற தங்களின் உருவ வடிவின் சக்தியை அனுமனுக்கு அளித்தனர்.

இதன்மூலம் ஆஞ்சநேயர் பஞ்சமுகம் கொண்டு விஸ்வரூபம் எடுத்து மனித குல வாழ்விற்காக மயில் ராவணனை அழித்தார்.

இப்படி பஞ்ச முகத்தில் விசேஷ அவதாரம் எடுத்த தால், பக்தர்களின் தீர்க்க முடியாத குறைகளை தீர்த்து வைக்கும் அருளாற்றல் கொண்டவராக "பஞ்சமுக ஆஞ்சநேயர்' விளங்குகிறார். அத்துடன் வெற்றியையும் வளத்தையும் குறிக்கும் வகையில் "ஜய மங்களா' என்றும் அழைக்கப்படுகிறார்.

பஞ்சமுக ஆஞ்சநேயரை வழிபடுபவர்களுக்கு நரசிம்மரின் அருளால் எடுத்த காரியங்களில் வெற்றியும், லட்சுமி கடாட்சமும், ஹயக்கிரீவரின் அருளால் உண்மை யான அறிவாற்றல், ஆன்மிக பலமும், வராகரின் அருளால் மனத்துணிவும், கருடனின் அருளால் அனைத்து விதமான நஞ்சின் ஆபத்து விலகும் தன்மையும், ஆஞ்சநேயரின் அருளால் மன அமைதியும், சகல சவுபாக்கியங்களும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

தோஷம் நீக்கும் பஞ்சமுக ஆஞ் சநேயர் அனைத்து கோரிக்கைகளையும் ஈடேற்றக்கூடிய வல்லமை படைத்தவர் பஞ்சமுக ஆஞ்சநேயர். இவரது முகங்களான கருடமுகம் பிணி நீக்கும், வராகமுகம் செல்வம் அளிக்கும், அனுமன் முகம் சகல கிரகதோஷமும் போக்கி எல்லா நலமும் தரும், நரசிம்மமுகம் தீமையைப் போக்கும், ஹயக்ரீவர் முகம் கல்வியும், ஞானமும் தரும். பக்தர்கள் வேண்டியதை வேண்டியவாறு அருள்கிறார் பஞ்சமுக ஆஞ்சநேயர். இவரது தாடை நீண்டு இருக்கும். முகம், நரசிம்ம முகம், கருடன் முகம், வராஹ முகம், அனுமன் முகம், ஹயக்கிரீவர் முகம் என ஆஞ்சநேயர் ஐந்து முகவடிவில் ஒருங்கிணைந்து உள்ளார்.



கிழக்கு முகம் ஹனுமனாக சத்ருக்களை அழிக்க வந்த முகம் "பிரதிவாதி முகஸ்நம்பி'' என்ற சுலோக வரியினால் அனுமனை வேண்டினால் எதிரிகள் விலகுவர் என பொருள் தரும். தெற்கு முகம் நரசிம்ம முகம். இம்முக ரூப ஆஞ்சனேயர் பயத்தினால் உண்டாகும் பிரச்சனைகள், பில்லி சூன்யம் துஷ்ட தேவதைகளால் உண்டாகும் பரயந்த்ர பரமந்த்ர தோஷங்களை போக்க அவதரித்த முகம். மேற்கு முகம் கருடன் முகத் தரிசனம் சரும நோய், விஷ நோய், ஊழ்வினை நோய்களை போக்கி அருள்தரும்.

வடக்கு முகம் வராஹமுகத் தரிசனம், தீராத கடன், பொருள் இழப்பு விஷ சுரம், மர்ம நோய்கள் முதலியனவற்றை அழித்து சாந்தியும், நிம்மதியும் தரவல்லது. பொருளாதார மேன்மை உண்டாகும். மேல் முகம் ஸ்ரீஹயக்கிரீவர் முகம். இம்முக ஆஞ்சநேயர் சகல கலைகளையும், சிறந்த ஞானத்தையும், சொல்வன்மையையும், சகல கலா வல்லவனாக தேர்ச்சியையும் தருபவர். அனுமனை பஞ்சமுக ஆஞ்ச நேயராக வழிபாடு செய்யும் போது உங்களுக்கும் சொல்வன்மை, ஆரோக்கியம், எதிரிகள் விலகல் என அனைத்தும் உண்டாகும்.

ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகமலர் மெயில் புக்

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின் அனைத்து புத்தகங்களையும் படித்து மகிழவும் டவுன்லோடு செய்யவும்
aanmeegamalar.com

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.

# மூலிகைகளால் உருவாக்கப்பட்டுள்ள லலிதாம்பிகை



குழந்தையும் தெய்வமும் ஒன்று என்று முன்னோர்கள் கூறுவார்கள், சிறுகுழந்தைகள் மற்றவர்களிடம் பழகும்போது பேதமில்லாமல் இருப்பார்கள், அவர்களிடம் தீய எண்ணங்கள் இருக்காது, அனைவரிடமும் அன்பாக பழகும் பக்குவம் குழந்தைகளிடம் மட்டுமே காணப்படும். இதனால்தான் குழந்தையைக் கண்டால் தீயவர்கள் கூட ஒருகணம் நல் புன்னகை புரிந்து தானும் அக்குழந்தையுடன் சேர்ந்து குழந்தையாக மாறி கொஞ்சி விளையாடுவார்கள்.

இந்த மனப்பான்மை தெய்வீகத்திலும், ஏற்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காக ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியாகிய பராசக்தி, தானே விரும்பி எடுத்து கொண்ட வடிவம் தான் ஸ்ரீ பாலா திரிபுர சுந்தரி வடிவம். உலகில் உள்ள நல்லவர், தீயவர் என்ற பேதம் இல்லாமல் அனைவருக்கும் அருள்புரிய அன்னை எடுத்த அற்புத அவதாரமாகவும் பால திரிபுர சுந்தரி அவதாரத்தை போற்றி வழிபட்டனர் நம் முன் னோர்கள்.

பொதுவாக குழந்தைகளிடம் கள்ளம் கபடம் இருக்காது, குழந்தைகளிடம் நெருங்கிப் பழகுவதுமிகவும் எளிது இதைப்போன்றே எளிமையாக ஆன்மீகத்தில் பல நிலைகளை அடைய இந்த பாலா வழிபாடு மிகவும் உதவியாகவும் உன்னதமாகவும் விளங்குகிறது, தியானித்தயுடனே மனதில் பிரசன்னமாவாள். அன்பு மழை பொழிவாள் பால திரிபுரசுந்தரி.

இந்த வழிபாட்டினை தமிழகத்தில் பிரபலப்படுத்த பல்வேறு கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், அம்மனை குழந்தையாகவும், குமரியாகவும், தாயாகவும் உருவகப்படுத்தி, தயாக திகழும் லலிதாம்பிகையின் விக்கிரகம் முழுவதும் மூலிகைகளால் செய்யப்பட்ட கோயில் காஞ்சி மாவட்டம், திருப்போரூரில் செம்பாக்கம் என்ற இடத்தில் அமைந்துள்ளது.

இந்த ஆலயத்தில் ஸ்ரீ பாலா திரிபுரசுந்திரி (குழந்தை), ஸ்ரீதருணீ திரிபுரசுந்தரி (குமரி), சர்வலோக மகாராணி ஸ்ரீ மத் ஔஷத லலிதா மகா திரிபுரசுந்தரி (தாயாக) மூன்று வடிவங்களில் காட்சிதருகிளாள்.

இக்கோயிலின் சிறப்பு லலிதாம்பிகையின் விக்ரகம் முழுவதும் மூலிகைகளால் உருவாக்கப் பட்டுள்ளது. இந்த அம்பிகை திருமேனி 2009ஆம் ஆண்டு மாசி பௌர்ணமி ஸ்ரீலலிதா ஜெயந்தி அன்று அம்பிகையின் பத்மபீடத்தில் கற்பேழை, வலம்புரி சங்கு ஸ்தாபனம் செய்யப்பட்டு மூலிகை அம்பாள் திருமேனி வடிவில் உருவாக்கப்பட்டது.

பல்வேறு மூலிகைகளைப் பற்றி ஆராய்ந்து முறைப்படி குண்டமண்டலங்கள் அமைத்து வேள் விகள் செய்யப்பட்டு, வளர்பிறை காலங்களில் மட்டுமே இந்த அம்மனின் திருமேனி அமைக் கப்பட்டது.

ஸ்ரீ சக்கர ராஜ சபை சந்நிதியில் 15 திதி நித்தியா தேவதைகளை படிகளாக அமைத்து அதன்மேல்தளத்தில் கருவறையில் லலிதாம்பிகை திருமேனி பல மூலிகைகள், மரப்பிசின், மரப்பட்டைகள் மற்றும் வேர்களிலிருந்து தயாரிக்கப்பட்ட கசாய கலவைக் கொண்டு, எந்த வித இரசாயணப் பொருட்களும் சேர்க்காமல், எண்ணற்ற பாணலிங்கங்கள், சாளகிராமங்கள், வலம்புரி சங்குகள், நவரத்தினங்கள், மனித உடலில் உள்ள நாடிநரம்புகளைக் குறிக்கும் விதமாக வெள்ளிக்கம்பிகள் முதலியவற்றை உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை பதிக்கப்பட்டு, வளர்பிறைக் காலங்களில் மட்டும் மூலிகை மருந்துகள் சாற்றப்பட்டு, பல ஆயிரமாயிரம் மூலமந்திர ஜபம் செய்து உருவேற்றி ஏழரை வருட காலங்களில் சிற்பாகம ஆய்வரும், ஸ்தபதியும் உபாசகருமான சுவாமிஜி இராஜசேகர இளம்பூரண சிவம் அவர்களால், மந்திர, யந்திர, தந்திர, அஸ்திர, சாஸ்திர முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒன்பது அடி உயரத்தில் நின்ற திருக்கோலத்தில் அங்குச, பாச, மலர், கரும்போடு அன்னை விஸ்வரூப தரிசனம் மிகவும் அற்புதமாக பக்தி பரவசத்துடன் உள்ளது.

இத்திருக்கோயிலில் பாலாவிற்கு சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெறுகிறது. பால திரிபுர சுந்தரி நான்குதிருக்கரங்களுடன் அர்த்த மண்டபத்தில் மூலவர் மற்றும் உற்சவராக குழந்தை திருமேனியாக சிற்பாக முறைப்படி பத்ம பீடத்தில் எழுந்தருளியுள்ளார்.

பிரதிமாதம் பௌர்ணமிநாள் மாலையில் ஸ்ரீ மூலவ பாலாமாகா அபிஷேகமும், ஸ்ரீபாலா ஊஞ்சல் உற்சவமும், 27 ஆரத்தி தரிசனமும், மூலிகைத் தீர்த்த பிரசாதமும், அன்னதானமும் நடைபெறுகிறது.

இவ்வாலயம் காலை 8.00 மணி முதல் மதியம் 1.00 மணிவரையும், மாலை 4.00 மணி முதல் இரவு 8.30 மணி வரையும் நடை திறந்திருக்கும், மேலும் இவ்வலாயம் பற்றிய விபரம் அறிய 09789921151 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

– தொகுப்பு: நாகராஜன்,
போன்8825844033












www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# சாமியே சரணம் ஐயப்பா

- சைவம் மற்றும் வைணவ பிரிவுகளின் ஒற்றுமை உருவமாக பார்க்கப்படுகிற புண்ணிய கோவில் சபரிமலை
- மதுரையில் இருந்து தன் சொந்த அமைச்சர்களால் உயிருக்கு ஆபத்து என கருதி சென்ற ராஜசேகர பாண்டியன் திருவிதாங்கூர் மன்னனால் உதவப்பட்டு பந்தள தேசத்து மன்னனாக ஆட்சி செய்தான். அவனின் வளர்ப்பு மகனே ஐயப்பன்
- ராஜசேகர பாண்டியன் பம்பை நதிக்கரையில் வேட்டையாட சென்றபோது கண்டெடுத்த கடவுள் அவதாரமே குழந்தை மணிகண்டன் (ஐயப்பன்).
- 12 வயது வரை மணிகண்டன் மனித உருவமாக வளர்ந்து தன அவதார நோக்கம் முடிந்த உடன் தியானம் செய்ய சென்ற இடமே இன்றைய சபரிமலை.
- பந்தள வம்சத்தை சார்ந்த நபர்கள் இன்றும் சபரிமலை செல்வதில்லை. தன் தந்தை ராஜசேகர பாண்டியன் சபரிமலை வந்தால் ஐயப்பன் எங்கு எந்தித்துவிடுவாரோ என்று அவர் கால்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. அதனால் தான் அந்த ஐதீகம் இன்றும் கடைபிடிக்கப்படுகிறது.





- பந்தள மன்னர் ராஜசேகர பாண்டியன் தன் வளர்ப்பு குழந்தை ஐயப்பனுக்காக செய்ததே திருவாபரண பெட்டி.. இதில் தங்கத்தில் சிறிய வடிவில் புலி,யானை, வாள், மாலை போன்றவை உள்ளன.. ஓலை சுவடிகளை இன்றும் காணலாம்.
- ராஜசேகர பாண்டியன் தன் மனைவி தலைவலி என்று சொல்லி புலியின் பாலை அடர்ந்த காட்டிற்குள் ஐயப்பனை கொண்டு வர சொன்னபோது இரண்டு முடிச்சுக்களில் பாதுகாப்பிற்கு தேவையான பொருட்களை கொடுத்து அனுப்பியதே இன்று இருமுடியாக ஐயப்ப பக்தர்கள் பின்பற்றுகின்றனர்.
- இந்தியாவில் கோவில் வளாகத்தில் (சன்னிதானத்தில்) அரேபிய முஸ்லிம் வாவர் சுவாமியாக காட்சி அளிப்பது சபரிமலையில் மட்டுமே.. வாவர் ஐயப்பனின் நெருங்கிய நண்பர்.. இந்த சன்னதியின் பூஜைச்சடங்குகள் முஸ்லிம் அர்ச்சகர்களால் செய்விக்கப்படுகிறது. மத நல்லிணக்கத்திற்கு எடுத்துகாட்டு.
- ஹரிவராஸனம் விச்வமோஹனம் என்ற புகழ்பெற்ற கே ஜே யேசுதாஸ் பாடிய பாடலே நடை அடைப்பில் ஐயப்பன் உறங்குவதற்காக இசைக்கப்படுகிறது. இந்த பாடலை எழுதியவர் கம்பங்குடி ஸ்ரீகுளத்துஐயர். இவர் பூர்வீகம் திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிச்சி
- Memoir of the survey of Travancore and Cochin states என்ற ஆங்கிலேயர் 1894 ல்

எழுதிய புத்தகத்தில் சபரிமலைக்கு செல்வோர் அப்போதே ஆண்டு தோறும் 15000 என்று குறிப்பிட்டு இருக்கிறார். அப்போதைய மக்கள்தொகை தென் இந்தியாவில் 5 கோடிக்கும் கீழ்.

- பரசுராமரால் பிரதிஷ்டை பண்ணப்பட்ட ஐயப்பன் சிலை 1950 ல் தீவிபத்தில் சேதம் அடைந்தது. இன்று அந்த சிலை உருக்கபட்டு கோவில் மணியாக கொடி மரம் அருகே காட்சி அளிக்கிறது.
- தீவிபத்தை தொடர்ந்து சிலையை யார் செய்ய வேண்டும் என்ற தேவபிரசன்ன குடவோலை முறைப்படி, ஐயப்பன் சந்நிதியில் சீட்டுப் போட்டு பார்க்கப்பட்டது. அதில் மதுரை நவாப் ராஜமாணிக்கம் பிள்ளையும் பி.டி.ராஜனும் பெயர்கள் வந்தன. அவர்கள் வழங்கிய விக்கிரகத்தைத்தான் இன்றைக்கும் தரிசித்துக் கொண்டிருக்கிறோம். அந்த சிலை கும்பகோணத்தில் அடுத்த சுவாமிமலையில் தேசிய விருது பெற்ற சிற்பக்கலைஞர் ராமசாமி ஸ்தபதியால் செய்யப்பட்டது.
- கேரளாவில் கோயில்களில் பராமரிப்பு பணிகளோ, முக்கிய மாற்றங்களோ நடத்த வேண்டும் என்றால் கடவுளிடம் அனுமதி கேட்பதற்காக ‘தேவபிரசன்னம்’ என்ற பூஜை நடத்தப்படுவது வழக்கம். அதன்படியே இன்றும் சபரிமலையில் பெண்கள் அனுமதிக்கப்பட வேண்டு மெனில் தேவபிரசன்னம் செய்யப்பட்டு கடவுளின் அனுமதி பெற வேண்டும் என்பது கோவில் நிர்வாகத்தின் முடிவு.
- Kamakhya Temple (Guwahati, Assam), Lord Kartikeya Temple (Pehowa, Haryana and in Pushkar, Rajasthan) Haji Ali Dargah (Mumbai, Maharashtra) Mangal Chandi Temple, (Bokaro, Jharkhand) Sree Padmanabhaswamy Temple (Malayinkeezhu, Kerala) Patbausi Satra (Barpeta, Assam) Jain Temple (Ranakpur, Rajasthan) போன்ற கோவில்களை போல சபரிமலையும் பெண்களை அனுமதிப்பதில்லை.
- ஐயப்பனை சாஸ்தாவாக வழிபடும் முறை தமிழகத்தில் இருப்பதே. முக்கியமாக தென் மாவட்டங்களில் அய்யனார் வழிபாடு மிக பிரபலம். அதில் ஆதி சாஸ்தாவாக காட்சி அளிக்கும் இடமே சொரிமுத்து அய்யனார் கோவில் பாபநாசம்,
- விரத முறையில் உணவை உண்டு அன்னதானம் செய்ய வேண்டும் என்பது சபரிமலை யாத்திரையில் மட்டுமே. மற்ற முறைகளில் விரதம் என்றால் உணவை உட்கொள்ளாமல் இருப்பது.
- ஏழை,பணக்காரர்,சாதி, உயர் அதிகாரி,பாமரன் என பாகுபாடு அன்றி அனைவரையும் சாமியாக பார்ப்பதே சபரிமலையின் தனிச்சிறப்பு.
- 41 நாட்கள் விரதம் இருக்கும் முறை சபரி மலை யாத்திரையில் மட்டுமே காணப்பட கூடிய ஒன்று. வேறு எந்த கோவிலிலும் காண முடியாத கடுமையான விரத முறை.
- அடர்ந்த காட்டிற்குள் வன விலங்குகள் தாக்கும் அபாயத்திற்கு மத்தியில் நடைபயனமாக 60 கிலோ மீட்டர் செல்வது சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு மட்டுமே
- கேரள கட்டுமான முறையையும் தமிழ்நாட்டின் சாஸ்தா வழிபாட்டையும் இணைத்து இரு மாநிலத்தின் ஒற்றுமை சின்னமாக இருப்பது சபரிமலை
- மணிகண்டன் கல்வியை குருவிடம் தான் பயில வேண்டும் என்று ஆசைப்பட்ட ராஜசேகர பாண்டியனின் ஆசையே இன்று குரு தத்துவமாக குருசாமியாக ஐயப்ப யாத்திரையில் இருக்கிற வழக்கம்.. தன்னை காண வேணுமெனில் குரு மூலமாகத் தான் வர வேண்டும் என்று ஆசைப்பட்டவர் ஐயப்பன்
- மற்ற கோவில்களை போல் தினமும் அல்லாமல் ஆண்டில் வெறும் 120 நாட்களுக்கும் குறைவாக நடை திறந்து இருக்கும் கோவில் சபரிமலையே
- சபரிமலை யாத்திரையை தமிழக மக்களிடையே மிகவும் பிரபல படுத்தியவர்





நவாப் ராஜ மாணிக்கம் பிள்ளை ... பாடல்கள் மூலம் பிரபலபடுத்தியவர்கள் வீரமணி சோமு மற்றும் அவர் தம்பி கே வீரமணி.

- இன்று போல் அடர்ந்த காட்டில் சாலை,ஹோட்டல்கள் இல்லாத காலத்தில் தமிழக பக்தர்களுக்காக உணவும் பேருந்து வசதியையும் ஏற்படுத்தி குருவாக இருந்தவர் நாகர்கோவிலை பூர்வீகமாக கொண்ட புனலூர் தாத்தா சுப்ரமணிய அய்யர்.
- சபரிமலைக்கு மற்ற கோவில்களை போல் குறிப்பிட்ட வருடங்களுக்கு பிறகு கும்பாபிஷேகம் செய்கிற வழக்கம் இல்லை. ஆண்டுதோறும் வரும் பக்தர்களின் பக்தியாலும் அதன் சக்தி குறையாமல் ஒவ்வொரு வருடமும் அதன் சைதன்யம் கூடிக்கொண்டே செல்வதாக நம்பப்படுகிறது.
- பரசுராமர் உருவாக்கிய சிறிய ஆலயத்தை மாற்றி அமைத்து பதினெட்டுபடிகளோடு உருவாக்கியவர் பந்தள அரசர் ராஜசேகர பாண்டியன்.
- சபரிமலையை தவிர மற்ற கோயில்களில் சாஸ்தாவை வீராசனத்தில் காணலாம். அதன்படி, சாஸ்தாவின் ஒரு கால் நிலத்திலும், மறு கால் மடித்தபடியும் இருக்கும். மடித்த காலையும் இடுப்பையும் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும் பட்டம் வீரப்பட்டம் எனப்படும்.
- சபரிமலையில் மாளிகைபுறத்து அம்மன் சன்னதி என்பது ஐயப்பன் வதம் செய்த பெண் மகிஷியின் தூய்மை வடிவமே. வதம் செய்த பிறகு ஐயப்பன் தன்னை மணந்து கொள்ள விருப்பம் சொன்ன போது “என் அருகிலேயே நீ இருக்கலாம் என்றும் எப்போது என்னை ஒரு கன்னிசாமியாவது வராமல் இருக்கிறாரோ அன்று உன்னை மணந்து கொள்கிறேன்” என்று கூறியவன் பிர்மச்சர்யம் கொண்ட ஐயப்பன்.. அந்த மாளிகைபுரத்து அம்மன் இன்றும் காத்துக் கொண்டு இருக்கிறாள்.. ஆண்டு தோறும் பக்தர்கள் கூட்டம் அலை மோதுகிறது சுவாமியே சரணம் ஐயப்பா!!!

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# சுகதுக்கத்தின் காரணம் மற்றும் துக்க நிவாரணத்தின் உண்மையான வழி

சுகதுக்கம் உடலால், மனதால், ஆன்மீக காரணங்களால் ஏற்படுகின்றன. அவற்றின் சில உதாரணங்களை இங்கு பார்க்கலாம்.

1. உடல்: நோய்வாய்ப்படும்போது உடலுக்கு துக்கம் உண்டாகிறது
2. மனம்: யாராவது நம்மை ஏமாற்றி விட்டால் மனதிற்கு துக்கம் ஏற்படுகிறது.
3. ஆன்மிகம்: பலவித முயற்சிகள் எடுத்தும் பரீட்சையில் தேறாதது, கல்யாணம் ஆகாமல் இருப்பது போன்றவற்றால் துக்கம் ஏற்படுகின்றது.

சுகமும் உடலால், மனத்தால் மற்றும் ஆன்மீக காரணங்களால் ஏற்படுகின்றன; ஆனால் அவற்றை பற்றி நாம் யாரும் சிந்திப்பதில்லை. காரணம் அவற்றை பற்றி சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. அதனால் நீங்கள் துக்கத்தின் காரணங்களைப் பற்றி சிந்தனை செய்து பாருங்கள்.

1. 'துக்கத்திற்கான காரணம் புத்திக்கு அப்பாற்பட்டது அதாவது ஆன்மீக பரிமாணம் உடையது' என்பதை புத்தி மூலமாக எவ்வாறு தெரிந்து கொள்வது?

கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு குறிப்புகளில் ஏதாவது ஒன்று பொருந்தியிருந்தால் பெரும்பாலும் துக்கம் ஆன்மீக காரணங்கள் மூலமாக ஏற்படுவதாக இருக்கும்.

அ. வெகுவாக முயற்சித்தும் எதிர்பார்த்த அளவு வெற்றி அடையாமல் இருப்பது

ஆ. ஒரே குடும்பத்தில் பலருக்கு கஷ்டங்கள் ஏற்படுதல், உதாரணத்திற்கு குடும்பத்திலுள்ள ஒரு குழந்தை மனநிலை சரியில்லாமல் இருத்தல், கல்யாணம் ஆன உடனேயே கணவன்மனைவி பிரிந்து போதல், படிப்பு பாதியில் நின்று போதல், அழகான, நன்கு படித்து பதவியில் இருக்கும் பெண்ணிற்கு திருமணம் நடக்காமல் இருத்தல் போன்றவை. இவை பற்றிய கவலைகள் அந்த தாய்தந்தையரின் மனதில் தோன்றும். சுருக்கமாக, குடும்பத்திலுள்ள அனைவரும் ஏதோ ஒரு விதத்தில் துக்கத்தை அனுபவித்தல். இது போன்ற வேளைகளில் பெரும்பாலும் அதிருப்தி அடைந்த மூதாதையரின் சூட்சும தேஹங்களால் இது போன்ற கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

இவ்விஷயங்களின் மூலம் ஆன்மீக காரணங்களால் ஏற்படும் துக்கத்தை நிவர்த்தி செய்ய சரியான உபாயம் ஆன்மீக பயிற்சி செய்வது என்பது தெளிவாகிறது. சாதனையால் பிராரப்தம் நஷ்டமடைந்து, தீய சக்திகளால் ஏற்படும் கஷ்டங்கள் குறைந்து ஆன்மீக கஷ்டங்களிலிருந்து விடுபட முடிகிறது.

சாதனை

தர்மம் இவ்வாறு கூறுகிறது, மோக்ஷத்தை அடைவதன் மூலமே நாம் எடுத்த மனித பிறவி அர்த்தமுள்ளதாகிறது. மோக்ஷத்தை அடைவதற்கு தினமும் குறைந்த பட்சம் 23 மணி நேரம் மனத்தால் புத்தியால் என்ன முயற்சி எடுக்கப்படுகிறதோ அதுவே 'சாதனை' எனப்படும்.

1. ஸகாம (எதிர்பார்ப்புடன் செய்யப்படும்) சாதனை மற்றும் நிஷ்காம (எதிர்பார்ப்பில்லாமல் செய்யப்படும்) சாதனை

ஸகாம சாதனை செய்வதால் நம் இச்சைகள் பூர்த்தியாகின்றன மற்றும் நிஷ்காம சாதனை செய்தால் ஆன்மீக முன்னேற்றம் ஏற்பட்டு இச்சைகளும் நிறைவேறும் வாய்ப்பு ஏற்படுகிறது. காரணம் 'என்னுடைய நிஷ்காம பக்தனுடைய இச்சைகள் அனைத்தையும் நான் பூர்த்தி செய்கிறேன்' என்பது பகவானின் வாக்கு. ஸகாம சாதனை செய்வதால் நாம் விரும்பியது கிடைக்கிறது; ஆனால் இறைவனை அடைய முடிவதில்லை. மனிதப் பிறவியின் நோக்கம் மோக்ஷத்தை அடைவது ஆகும். நிஷ்காம சாதனை செய்யும்போது மோக்ஷத்தை அடைவது சாத்தியமாகிறது.

2. 'எவ்வளவு மனிதர்கள் உள்ளனரோ அவ்வளவு இயல்புகள், எவ்வளவு இயல்புகள் உள்ளனவோ அவ்வளவு சாதனை வழிகள்' என்பது சாதனையின் சித்தாந்தமாகும் !

எந்த இரு மனிதர்களும் ஒன்று போல் இருப்பதில்லை. ஒவ்வொருவரின் உடல், மனம், விருப்புவெறுப்பு, குணகுறைகள், நம்பிக்கை எதிர்பார்ப்புகள், ஆசைகள் ஆகிய எல்லாம் வெவ்வேறு ஆகும். ஒவ்வொருவரின் புத்தியும் வேறு. சஞ்சித, பிராரப்தம் வெவ்வேறு; ஒவ்வொருவரின் பூமி, நீர், நெருப்பு, வாயு மற்றும் ஆகாய தத்துவங்கள் (மனிதர்கள் பஞ்சபூதங்களால் ஆனவர்கள்) மற்றும் ஸத்வ, ரஜ, தம ஆகிய முக்குணங்களின் விகிதாசாரம் வெவ்வேறானவை. சுருக்கமாக ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறு இயல்பு மற்றும் திறன் உடையவர்களாய் இருப்பதால் மோக்ஷத்திற்கு செல்லும் சாதனை வழிகளும் வெவ்வேறாக உள்ளன. உங்களின் இயல்பு மற்றும் திறனுக்கு ஏற்றவாறு சாதனை செய்வதால் விரைவில் மோக்ஷத்தை அடைய இயலும். அதனால் உங்களில் சிலர் கர்மயோகியாகவும், ஞானயோகியாகவும் அல்லது பக்தியோகியாகவும் இருக்கக் கூடும். அனைவரும் ஒரே சாதனை வழியை பின்பற்ற வேண்டும் என்பது இல்லை.

3. காலத்திற்கேற்ற சாதனை

காலத்திற்கேற்ற சாதனை செய்வதால் விரைவில் ஆன்மீக முன்னேற்றம் ஏற்படுகிறது. சத்ய யுகத்தில் ஞானயோகப்படியான சாதனை சுலபமாக இருந்தது. எல்லோருக்கும் வேத உபநிஷதங்களின் அர்த்தம் புரிந்திருந்தது. இன்று ஞானயோக சாதனை செய்வது மிகக் கடினம். காரணம் வேதஉபநிஷத கீதை ஆகியவற்றின் அர்த்தங்களை புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் மனிதரிடையே இல்லை. த்ரேதா யுகத்தில் தவம் அதாவது தியான யோகம் சாதனை வழியாக இருந்தது. ரிஷிகள், முனிவர்கள் ஆயிரக்கணக்கான வருடங்கள் தவம் இயற்றினார். பகீரதன் கங்கையை பூமிக்கு கொண்டு வருவதற்காக 85 ஆயிரம் வருடங்கள் தவம் இயற்றினார். இன்று நமக்கு 12 நிமிடங்களுக்கு மனம் தியானத்தில் லயிக்கிறதா? இல்லைதானே! காரணம் கலியுகத்தில் ரஜதம தன்மையுடைய சிந்தனைகள் மிக அதிக அளவு உள்ளன. த்வாபர யுகத்தில் யக்ஞகர்மா, மூர்த்திபூஜை போன்ற கர்மகாண்டம் சாதனையாக இருந்தது. யக்னங்கள் மூலமாக தேவதைகளை திருப்திப்படுத்தி வேண்டியன கேட்டுப் பெறுவதற்குரிய காலமாக இருந்தது. இன்று யாகத்தில் சங்கல்பம் இல்லை; காரணம் ரிஷி, முனிவர்களைப் போன்ற யாகங்களை செய்யக்கூடிய சாத்வீக புரோஹிதர்கள் இன்று கிடைப்பதில்லை. இன்று உலக அமைதிக்காக பல யாகங்கள் நடக்கின்றன. ஆனால் உண்மையில் உலகில் அமைதி நிலவுகிறதா என்ன? இன்றைய கலியுகத்தின் சாதனை பக்தியோகமாகும். 'கலியுகத்தில் பக்தி யோகமே சிறந்த சுலபமான வழியாகும்; என்று உலகுக்கு உணர்த்தவே வியாச பகவான் பாகவதத்தை இயற்றினார். கலியுகத்தில் பெரும்பான்மையான மகான்கள் பக்தியோகத்தை பின்பற்றியவர்களே. பக்தியோக சாதனையில் சாதாரண இயல்பான முயற்சியே நாம ஸ்மரணமாகும். ஸ்மரணம் என்பது நவவித பக்திகளில் ஒன்று. கலியுகத்திற்காக 'யக்ஞானாம் ஜபயக்னோஸ்மி', அதாவது 'எல்லாவித யாகங்களில் நாமஜப யாகம் மிகச் சிறந்தது' என்று ஸ்ரீகிருஷ்ணன் கீதையில் (அத்தியாயம் 1, ஸ்லோகம் 25) கூறியுள்ளான்.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626


ஆன்மிகமலர் டிரஸ்ட்
Tamilnadu Government Redg.304/2016
எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.
AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106 MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும் 8825844033

# அருள்நிலை என்ற ஆன்மீக பாதைக்கு நம்மை அழைத்து செல்வதற்கும், சுவாசம் பயன்படுகிறது

சிந்தனை செய்கின்ற ஆற்றல், மனித உடம்பில் எந்த பகுதியில் இருக்கிறது என்று இதுவரை முடிவாக தெரியவில்லை என்றாலும், மூளையின் ஒரு பகுதியிலிருந்து சிந்தனைத்திறன் செயல்படுகிறது என்று அறிவுலகம் நம்பி ஏற்று வருகிறது. இப்படி மூளையிலிருந்து உற்பத்தியாகுகின்ற சிந்தனை என்ற எண்ணங்களை உடல் முழுவதும் எடுத்துச்செல்லும் பொறுப்பு நாடிகளுக்கு இருக்கிறது. இந்த நாடிகள் மூலமாகவே குண்டலி சக்தியும் கீழே இருந்து மேலே ஏறிச்செல்கிறது.

நாடிகள் என்பது மிகவும் நுட்பமானது. சாதாரண கண்களுக்கு தட்டுப்படாதது. மனித உடம்பிற்குள் இருக்கும் எலும்புகளை பார்க்கலாம். உள் உறுப்புகளை பார்க்கலாம். நரம்புகளையும் பார்க்கலாம். நாடிகளை மட்டும் பார்க்க முடியாது. நவீன உலகம் கண்டுபிடித்துள்ள மிக நுட்பமான பூதக் கண்ணாடிகளின் துணை கொண்டு கூட நாடிகளை கண்டறிய முடியாது. இப்படி கண்ணுக்கே தெரியாத நாடிகள் இருக்கிறது இவைகள் தான் மனித உடலை ஆட்சி செய்கிறது. உயிர் உடலில் தங்குவதற்கு ஆதாரமாக இருக்கிறது என்று உலகிற்கு முதல்முறையாக உணர்த்தியவர்கள் நமது சித்தர்களே ஆவார்கள்.

“பூத சுத்தி சம்ஹிதை” என்ற பழமையான வடமொழி வைத்திய சாஸ்திர நூல் நாடிகளின் எண்ணிக்கை எழுபத்தி இரண்டாயிரம் என்கிறது. பிரபஞ்ச சாரம் என்ற நூலோ மூன்றுலட்சம் நாடிகள் உடம்பில் இருப்பதாக கூறுகிறது. சிவசம்ஹிதை என்ற அருமையான வைத்திய நூல் மூன்றரை லட்சம் என்றும் சொல்கிறது. எத்தனை இலட்சம், எத்தனை ஆயிரம் நாடிகள் இருந்தாலும் இடகலை, பிங்கலை, சுழுமுனை, சரஸ்வதி, லஷ்மி, மேதா, காந்தாரி, அலம்புடை, சங்குனி, குரு என்ற பத்து நாடிகளே முக்கியமானது என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

மேலே கூறப்பட்ட பத்து நாடிகளில் சுழுமுனை நாடியும், மேதா நாடியும் சிறப்பான யோக நாடிகள் என்று தெரிகிறது. குண்டலினி சக்தி சுழுமுனை நாடி வழியாகவே மூலாதாரத்தில் இருந்து சகஸ்ரத்தை நோக்கி பயன்படுகிறது. முறைப்படியான யோக பயிற்சி உள்ளவர்களுக்கு மட்டுமே சுழுமுனை நாடி தெளிவாக பேசும். சுழுமுனை நாடி தாமரை தண்டின் நூல் போல முதுகெலும்பு அடியில் உள்ள மூலாதாரத்தில் குண்டலினி சக்தியின் நடுவில் பொருந்தி நின்று முதுகுத்தண்டு உட்புறம் வழியாக மேல் நோக்கி ஊடுருவிச்செல்கிறது. அப்போது இந்த நாடியோடு ஒரு நதி எப்படி கிளை நதிகளை



தன்னோடு இணைத்துக்கொண்டு சர்வ வேகத்தோடு செல்லுமோ அதே போல சித்திர நாடி, வஜ்ர நாடி என்ற இரண்டு நாடிகளை இணைத்து கொண்டு பயணத்தை நடத்துகிறது.

இடைகளை நாடியும், பிங்கலை நாடியும் தண்டுவடத்தின் வெளியே இடது பக்கமும், வடது பக்கமும் பின்னிப்பிணைந்து இரண்டு நாகங்கள் போல நிற்கின்றன. இவைகள் சுவாதிஸ்தானம், மணிப்பூரகம், அநாகதம், விசுத்தி, அக்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களை தொடும்போது மட்டும் ஒன்றை ஒன்று நேருக்கு நேர் சந்தித்து கொள்கிறது. கத்தரிகோல் போன்று மேலே வருகின்ற இரு நாடிகளும் புருவமத்தியில் வந்து பிரிந்து, இடகலை நாடி இடது மூக்கையும், பிங்கலை நாடி, வலது மூக்கையும் ஆதாரமாக கொண்டு நிற்கிறது.

இடகலை, பிங்கலை மற்றும் சுழுமுனை ஆகிய நாடிகளுக்குள் இடைகலையிலிருந்து இரண்டு நாடிகளும் பிங்கலையிலிருந்து இரண்டு நாடிகளும் உருவாகி வடமாகவும், இடமாகவும் சென்று இரண்டு கண்களையும், இரண்டு செவிகளையும் செயல்படச்செய்கிறது சுழுமுனையிலிருந்து தோன்றுகிற ஒரு நாடி நாவின் அடிப்பகுதியில் நிற்கிறது. இந்த நாடிக்கு சிகுவை அல்லது சிங்குவை என்று சித்தர்கள் பெயர் சொல்கிறார்கள். சுவாதிஸ்தானத்தில் இருந்தும் இரண்டு நாடிகள் புறப்படுகிறது. இவை கீழ்நோக்கி சென்று ஆண்குறியை தொடுகிறது. இதற்கு சங்கிலி என்று பெயர். எருவாயை தொடுகின்ற இன்னொரு நாடிக்கு குரு என்று பெயர்.

இடகலை, பிங்கலை மற்றும் சுழுமுனை ஆகிய நாடிகள் கடவுளோடு மனிதனை இணைக்கும் நாடிகள் என்றால் சரஸ்வதி, லஷ்மி, மேதா ஆகிய நாடிகள் இந்த உலகின் வாழ்க்கையை மனிதனுக்கு செம்மையாக்கி தர உதவுகிறது. இடகலை நாடிக்கும், சரஸ்வதி நாடிக்கும் உறவு உண்டு அதே போல சுழுமுனை நாடிக்கும், மேதா நாடிக்கும் நெருக்கம் உண்டு சரஸ்வதி நாடி மூளையோடு தொடர்பு கொண்டது. மனிதனது சிந்தனையாற்றல் சரஸ்வதி நாடியின் வழியாகவே செயல்படுகிறது. இதனால் தான் கல்வி மற்றும் கலைகளின் கடவுளாக சரஸ்வதி தேவியை ஞானிகளும், முனிவர்களும் கண்டார்கள்.

லஷ்மி நாடி, சுழுமுனை நாடி, சரஸ்வதி நாடி மற்றும் மேதா நாடி ஆகிய நாடிகள் எல்லா மனிதர்களுக்கும் சமமாக செயல்படுவது கிடையாது. தனிமனிதனின் தன்மைகளுக்கு ஏற்ப கூட்டியோ, குறைத்தோ செயல்படுகிறது. இதன் செயல்பாட்டிற்கு வம்சா வழியும், பரம்பரையும் மற்றும் சுற்றுப்புறச் சூழலும் சுயசிந்தனையும் வெகுவான காரணங்களாக இருக்கிறது. சுருக்கமாக சொல்வது என்றால், மனிதன் திறமையானவனாக இருப்பதற்கும், திறமையற்று இருப்பதற்கும் இந்த நாடிகளே ஆதாரங்கள் என்று சொன்னால் அது மிகையில்லை.

கடவுளிடம் மனிதனை அழைத்து செல்லும் நாடிகளாக இடகலை, பிங்கலை நாடிகள் இருப்பதனால் அவைகள் பேதம் இல்லாமல் அனைவருக்கும் செயல்படுவதாக இருக்கிறது. பிராண சக்தியை உடம்பில் கட்டுப்படுத்தி, உடல் இயக்கத்திற்கு எந்த நேரத்தில், எது தேவை என்பதை கண்டறிந்து இந்த நாடிகள் செயல்படுகின்றன. அதனால் இவைகளை

சூரியகலை என்றும் சந்திர கலை என்றும் சித்தர்கள் அழைக்கிறார்கள். சூரியகலை என்கிற பிங்கள நாடி செயல்படும் போது இடது மூக்கு வழியாக சுவாசம் நடக்கிறது. சந்திர கலை என்ற இடகலை நாடி செயல்படும் போது சுவாசம் வலது மூக்கில் நடைபெறுகிறது. சந்திரகலை செயல்பட்டால் சூரியகலை நின்றுவிடும். சூரியகலை இயங்கும் போது சந்திரகலை அசையாது. சந்திர கலை சுவாசம் குளிர்ச்சியையும், சூரியகலை சுவாசம் வெப்பத்தையும் உடம்புக்கு தரும். இந்த தட்பவெப்ப நிலையை பயன்படுத்தியே குண்டலினி சக்தி மனித உடம்பின் வெப்பத்தை சீரான நிலையில் வைக்கிறது.




சுவாசம் என்பது, மனித உடம்பில் பல இந்திர கலைகளை நடத்துவதாக இருக்கிறது. உடம்பு, உயிரோடு இருப்பதற்கு பிராணவாயுவை உள் வாங்கி வெளியே விடுவதோடு மட்டும் சுவாசத்தின் பணிகள் முடிவடைவது கிடையாது. அருள்நிலை என்ற ஆன்மீக பாதைக்கு நம்மை அழைத்து செல்வதற்கும், சுவாசம் பயன்படுகிறது. பொருள் நிலை என்ற இவ்வுலக வாழ்க்கைக்கு தேவையானதை பெற்றுக்கொள்வதற்கும் சுவாசம் பயன்படுகிறது.

சுவாச ஓட்டத்தில் நமது ஆயுள் அளவு அடங்கி இருக்கிறது என்று வாசியோகம் குறிப்பிடுகிறது. அதுமட்டுமல்ல நாம் எதை விரும்புகிறோமோ அதை மிகச்சுலபமாக சுவாசத்தை நம் விருப்பபடி மாற்றி அமைத்துக்கொள்வதனால் பெறலாம் என்று ஹடயோகம் சொல்கிறது.

அந்த காலத்தில் பெரியவர்கள் பலர் கையில் குடை இல்லாமல் வெளியே போக மாட்டார்கள். மழை வெயில் இவற்றிடமிருந்து நம்மை காப்பாற்றி கொள்வதற்கு மட்டும் குடை பயன்படுவது கிடையாது. அதன் பயன் எல்லைகளை கடந்தது. வெகு நாட்களாக முடிவுக்கே வராமல் ஒருகாரியம் இழுத்தடித்துக் கொண்டே போகிறது என்றால் அந்த காரியத்தை முடிக்க செல்லும் போது இடது கக்கத்தில் குடையை நன்றாக அழுத்தி கொண்டு செல்வார்கள் அப்படி அழுத்தும் போது வலது மூக்கில் மட்டுமே சுவாசம் ஓடும். இது சூரிய சக்தியை நமக்குள் இழுத்து தருவதனால் நமது பேச்சை மற்றவர்கள் மந்திரம் போல கேட்பார்கள். முடியாத காரியம் சுபமாக முடியும்.

நாள் கணக்காக படிக்கிறேன், மணிக்கணக்காக விழித்திருந்தும் படித்து பார்க்கிறேன். உறக்கம் கெடுகிறதே தவிர, படித்தது எதுவும் மனதில் தங்குவதில்லை என்று பலருக்கும் குறையுண்டு. இவர்கள் மிகச்சுலபமான பயிற்சியின் மூலம் வலதுநாசி வழியாக சுவாசத்தை நடத்துவதற்கு கற்றுக் கொண்டால் படித்தது அனைத்தும் பச்சைமரத்தில் ஆணி அடித்தது போல மனதில் ஒட்டிக்கொள்ளும். இந்த பயிற்சி ஒன்றும் கடினமான பயிற்சி இல்லை. நாற்காலியில் அமர்ந்த நிலையிலோ, படுக்கையில் சாய்ந்த நிலையிலோ செய்யலாம். இடதுபகுதி பிருஷ்டத்தை நன்றாக அழுத்திக் கொண்டு உட்கார்ந்தால் வலது சுவாசம் சுகமாக நடக்கும்.

இப்படி சுவாசத்தில் எத்தனையோ சாதனைகளை செய்யலாம். சித்தர்களின் தலைவரான திருமூலர், தமது திருமந்திரத்தில் சுவாசத்தை மாற்றி அமைத்துக்கொண்டு தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபட்டால் என்ன குழந்தை வேண்டுமென்று விரும்புகிறோமோ அதை பெறலாம் என்று வழிவகை சொல்லி இருக்கிறார். இப்படி சுவாசத்தின் பயன்கள் விரிந்து கொண்டே செல்கிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434









அனைத்து ஆன்மிக செய்திகளையும்
உங்கள் மொபைல், டேப் போன்றவற்றிலும்
24x7 மணிநேரமும் பார்த்து பயன்பெறலாம்

GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள்,
உடல்நலன், பலன்கள், இ–புத்தகம் போன்றவற்றை
எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில்
பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.

அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்

# சக்ர பூஜை பண்ணு!

பெரியவாளிடம் அத்யந்த பக்தி கொண்டு ‘ஸகலமும் பெரியவாளே’ என்று இருக்கும் குடும்பங்களில் ஸ்ரீ ராகவனின் குடும்பமும் ஒன்று!

அவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள்தான் என்றாலும், நித்யம் ஸ்ரீசக்ரபூஜை பண்ணிக் கொண்டிருந்தார் ராகவனின் அப்பா. ஆனால் ராகவனின் அப்பாவின் அப்பாவுக்கோ, இந்த ஸ்ரீசக்ர பூஜை கொஞ்சமும் மனஸுக்கு இசையவில்லை.



“ஸ்ரீசக்ரத்தை விடாம காலம் முழுக்க பூஜை பண்ணுவேன்னு ஸத்யம் பண்ணுப்பா!..”

ராகவனின் அப்பா கடைஸிக் காலத்தில் ராகவனிடம் இந்த ஸத்யத்தை வாங்கிக் கொண்டார். அவர் காலமானதும், ராகவனின் தாத்தா அந்த ஸ்ரீசக்ரத்தை எடுத்து பரணில் போட்டுவிட்டார்.

என்றைக்கு ஸ்ரீசக்ரம் பரணுக்கு போனதோ, அன்றிலிருந்து ராகவனின் தாயாருக்கு உடலெல்லாம் ஓயாத எரிச்சல்! காரணம் எதுவும் புரியவில்லை!

இதை அறிந்த ராகவனின் அம்மாவழி தாத்தா தனக்குத் தோன்றிய விசாரத்தை கூறினார்....

“பூஜை பண்ணிண்டிருந்த ஸ்ரீசக்ரத்தை இப்டி பரண்ல போடுவாளா? பழையபடி எடுத்து பூஜை பண்ணு! எல்லாம் ஸரியாய்டும்..”

உடனே ஸ்ரீசக்ரத்தை எடுத்து, அப்பா பண்ணியது போல பூஜை பண்ண ஆரம்பித்தார் ராகவன். அம்மாவின் உடல் எரிச்சல் ஆச்சர்யமாக குணமடைந்தது!

ஆனால் அப்பாவழி தாத்தாவுக்கு ஆரம்பத்திலிருந்தே இதில் உடன்பாடு இல்லை.

“இதோ பாரு ராகவா! நீயோ ஊர் ஊராப் போய்ண்டிருக்க! அதுனால ஒன்னால ஸ்ரீசக்ரத்துக்கு ஒழுங்கா பூஜை பண்ணமுடியாது! பூஜை பண்ணாம வெச்சுக்கறதைவிட, பேசாம இத... ஏதாவது கோவிலுக்கு குடுத்துடலாம் இல்லாட்டா, கடல்ல தூக்கிப் போட்டுடலாம்!”

“அருமையான” யோஜனை சொன்னார்!

ராகவனுக்கு ஒரே குழப்பம்! அப்பாவுக்கு குடுத்த ஸத்யத்தை காப்பாற்றுவதா? தாத்தா சொல்வதை கேட்பதா? குழம்பிக் குழம்பித் தானே தெளியணும்? குழப்பத்தின் கடைஸியில், ஒளி தெரிந்தது!........

ஸ்ரீசக்ரத்தை எடுத்துக் கொண்டு, ஓடினார்.... பெரியவாளிடம்!

பெரியவாளுக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டு இவர் எதுவும் சொல்லும் முன்பே, பெரியவா கேட்டார்...

“என்ன? ஒங்காத்து தெய்வத்தைப் பத்தி கேக்கணுமோ?”

சிலிர்த்துப் போனார் ராகவன்.

ஸ்ரீசக்ரத்தை பெரியவா முன் வைத்தார். பெரியவா சற்றுநேரம் அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்...

“பாரு! ராகவா! இது... ஒங்காத்து தெய்வம்! ஒனக்கு பெரிய குடும்பமே இருக்கு.! பூஜை பண்றதுக்கு ஆத்துல, யாருமே இல்லேன்னாத்தான், ஒன் தாத்தா சொல்ற மாதிரி பண்ணலாம். ஆத்துல அம்மா தெனோமும் வௌக்கேத்தி ஸளக்ராமத்துக்கு அன்னம் நைவேத்யம் பண்றச்சே, இந்த ஸ்ரீசக்ரத்துக்கும் தீபம் காட்டறதுல ஒண்ணும் சிரமம் இல்லியே?...”

“அதெல்லாம் இல்ல... பெரியவா! தாத்தா.....”

“யார் சொன்னாலும் எதுவும் கொழப்பிக்காம, கவலைப்படாம போ! அம்பாள் ஸகல க்ஷேமத்தையும் குடுப்பா!...”

திருக்கரத்தால் குங்குமத்தை அள்ளி ஸ்ரீசக்ரத்தின் மேல் போட்டு, ராகவனிடம் குடுத்தார். அவருடைய அம்மாவின் ஸந்தோஷத்துக்கு அளவே இல்லை! பூஜை தொடர்ந்தது!...........

1970ல் அவருடைய அம்மாவுக்கு திடீரென்று புத்தி பேதலித்த மாதிரி அடிக்கடி கத்த ஆரம்பித்தாள். டாக்டர்கள் மனோவ்யாதி என்று treatment குடுக்கவேண்டும் என்றனர்.

அம்மாவை அழைத்துக் கொண்டு மனஸையே நாஸம் பண்ணிவிடும் மஹாசக்தியான பெரியவாளிடம் போனார்!



ஸ்ரீமடத்தில் அன்று ஏக கூட்டம்! இவர் முறை வந்தது.....

“என்ன? ராகவா... அம்பாள் பூஜைல்லாம் நன்னா நடக்கறதா?” ............

ஸுமார் 20 வர்ஷங்களுக்கு பிறகும் என்ன ஒரு ஞாபகசக்தி!

“பூஜையெல்லாம் பெரியவா அனுக்ரஹத்ல நன்னா நடக்கறது..! ஆனா, அம்மாக்குத்தான் என்னவோ புத்தி ஸரியில்லாத மாதிரி அப்பப்போ கத்தறா! ஒரு மாதிரி தீமீலீணீஸ்மீ பண்றா... பெரியவாதான் அம்மாவை காப்பாத்தணும்“

அம்மாவின் நிலையை சொன்னார்.

டக்கென்று பதில் வந்தது....

“ஸ்ரீசக்ரத்ல ஒரு கீறல் விழுந்திருக்கு...! ஊருக்கு போனதும் நீயே இனிமே ஒங்கையால ஸ்ரீசக்ர பூஜை பண்ணு...! எல்லாம் ஸெரியாயிடும்“

அபயம் அளித்தார்.

ஊர்களுக்கு அடிக்கடி போகவேண்டியிருப்பதால், பல வர்ஷங்களாகவே ஸ்ரீசக்ர பூஜை பண்ண ஒரு சாஸ்த்ரிகளை ஏற்பாடு பண்ணியிருந்தார்.

“ஸ்ரீசக்ரத்துல.... கீறல் எப்படி விழுந்திருக்கும்?”

மனஸ் பூரா அரிப்பு! ஊருக்குப் போனதும், சாஸ்த்ரிகளை அழைத்து ஸ்ரீசக்ரத்தை பரிஸோதித்தால், அதில் ஒரு ஆழமான கீறல் இருந்தது!

ஸ்ரீசக்ரத்தின் பின்பக்கம் காணப்பட்ட ஆழமான கீறலைப் பார்த்த சில விஷயமறிந்தவர்கள் சொன்னது....

“ஸ்ரீ சக்ரத்ல இருக்கற மந்த்ரங்களை யாரோ copy எடுக்க try பண்ணியிருக்கா! அதுனால தான் இந்த கீறல் விழுந்திருக்கணும்“

பிறகு அதை முறைப்படி ஸரி பண்ணி, தானே பூஜை பண்ண ஆரம்பித்தார் ராகவன்.

எங்கோ இருக்கும் பெரியவாளுக்கு இந்தக் கீறல் தெரிந்திருப்பதில் அதிஸயம் இல்லையே!

ஸ்ரீசக்ரரூபமும், அதன் அதிதேவதையும் அவர் தானே!

பெரியவா சொன்னபடி ராகவனே ஸ்ரீசக்ர பூஜை பண்ண ஆரம்பித்ததும், படிப்படியாக அவருடைய அம்மாவின் மனநிலை முழுவதுமாக குணமானது.

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 08825844033

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.